CONNEMARA PUBLIC LIBRARY
11 JAN 1956

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 15 } **மார்ச்சு 1954** } இதழ் 3

## வங்காளத்தைக் குலுக்கிய பன்னிரண்டு நாட்கள் !

சரியாகப் பன்னிரண்டு நாட்கள்தான்—ஆனால் அந்தப் பன்னிரண்டு நாட்களுக்குள்ளாக மேற்கு வங்காள செகண்டரிப் பள்ளி ஆசிரியர் உலகம் வெற்றிமாலை சூடிவிட்டது.

பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாள், அவர்கள், தங்களுடைய குறைகள் தீர்வதற்காக அமைதியான முறையில் அரியதோர் கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். அந்தக் கிளர்ச்சி, பிப்ரவரித் திங்கள் இருபத்தோராம் நாள், வெற்றி—வெற்றி என்கிற வீர கீதத்தைப் பாடும்படியான நிலையை அவர்களுக்குத் தேடிக் கொடுத்துவிட்டது.

பன்னிரண்டு நாட்கள்தான் நடைபெற்றது மேற்கு வங்க செகண்டரிப்பள்ளி ஆசிரியர்கள் கிளர்ச்சி. ஆனால் அந்தப் பன்னிரண்டு நாள் போராட்டம், அவர்களுடைய பன்னெடுங்காலக் குறைகளைக் கணிசமான அளவுக்குப் போக்கிவிட்டது.

கிளர்ச்சி தொடங்குவதற்கு முன்னால் அவர்கள் பெற்றுவந்த மாத ஊதியம் ரூபாய் ஐம்பது. பஞ்சப்படி ரூபாய் பத்து. ஆக மொத்தம் அவர்களுக்குக் கிடைத்துவந்த வெள்ளிப்பணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் அறுபது.

ஆனால் கிளர்ச்சி முடிந்த பிறகோ, அவர்களுக்குக் கிடைத்து வருகிற மாத ஊதியம் ரூபாய் அறுபது. பஞ்சப்படி ரூபாய் பதினே ழரை. ஆகமொத்தம் இப்போது அவர்களுக்குக் கிடைக்கும் தொகையின் அளவு ரூபாய்—எழுபத்தேழரை.

ஆம்! அறப்போர்க் கிளர்ச்சியின் விளைவாக மேற்கு வங்காள செகண்டரிப் பள்ளி ஆசிரியர்கள் இனி, மாதம் ஒன்றுக்குப் பதினே ழரை ரூபாய் அதிகப்படியான ஊதியம் பெறுகிற நிலை ஏற்பட்டிருக் கிறது.

கிளர்ச்சிக்கு முன்னால், இதே அளவு அதிகப்படி ஊதியத்தைத் தர மேற்கு வங்க அரசாங்கம் முழுமூச்சுடன் மறுத்தது.

ஆனால் கிளர்ச்சி தொடங்கப்பட்ட பன்னிரண்டாம் நாளே, அர சாங்கம், தானாக முன்வந்து, இந்த அளவு ஊதியம் தர மகிழ்ச்சி யுடன் ஒப்புக் கொண்டுவிட்டது.

“அதிகப்படி ஊதியமா கேட்கிறார்கள் ஆசிரியப் பணியினர்? கொடுக்க முடியாது!”

“கிளர்ச்சியைத் தொடங்கினால் பணிந்துவிடுவோம் என்று எண்ணுகிறார்கள்? அதுதான் நடக்காது.”

“ஆயிரம் நாட்கள் கிளர்ச்சி நடந்தாலும் சரி. அரைக் காசுகூட அதிகம் தரமாட்டோம்.”

“அவர்கள் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் பணம் இல்லையே எங்களிடம்?”

இப்படித்தான் பேசிற்று மேற்கு வங்காள காங்கிரஸ் அரசாங் கம்—கிளர்ச்சி தொடங்கப்படுவதற்கு முன்னால்.

ஆனால் அதே மேற்கு வங்காள அரசாங்கம்தான், கிளர்ச்சி தொடங்கப்பட்ட பன்னிரண்டாம் நாள், ஆசிரியர்களின் கோரிக்கை மிகப் பலவற்றை ஒப்புக்கொண்டு தீரவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

மகத்தான வெற்றி பெற்றிருக்கிறார்கள் வங்காள மாநில செகண்டரி ஆசிரியர்கள். இந்த உண்மையை, வங்க அரசாங்கம் உட்பட, யாருமே மறுக்க முடியாது.

இத்தகைய சிறந்த வெற்றியை எப்படிப் பெற முடிந்தது வங்க மாநில செகண்டரி ஆசிரியர்களால்?

பணபலம் மிகுந்தவர்களா அந்த ஆசிரியர்கள்? செச்சே! பரம ஏழைகள்! வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வேதனைக் கீதம் பாடிக் கிடப்பவர்கள்.

பத்திரிகை பலம் உண்டா அவர்களுக்கு? கிடையாது கிடையாது. பலம் பொருந்திய பத்திரிகைகள் பலவற்றை நடத்துகிற அளவுக்கு வசதியும் வாய்ப்பும் அவர்களுக்கு ஏது?

மிட்டாமிராசுகளின் ஆதரவு உண்டா அவர்களுக்கு? இல்லை இல்லை. எட்டடுக்கு மாளிகைகளில் உலவும் உல்லாசச் சீமான்கள் இந்த எழுத்தறிவிக்கும் இயல்பினரை ஏன் ஆதரிக்கப் போகிறார்கள்?

செல்வாக்கில் சிறந்தவர்களா? அல்லது ஆள் அம்பு உடையவர்களா? அப்படியும் இல்லை அவர்களுடைய நிலை.

வறுமையால் வாடுபவர்கள். பணபலம் இல்லாதவர்கள். பத்திரிகைபலம் கிடைக்காதவர்கள். வாழ்க்கை வசதிகள் பெற முடியாதவர்கள், மிட்டாமிராசுகளின் ஆதரவையோ, வணிகக் கோமான்களின் புன்சிரிப்பையோ தங்கள் பக்கம் திருப்ப இயலாதவர்கள். இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் கட்டுண்டு கிடப்பவர்கள்தான் வங்க மாநில செகண்டரி ஆசிரியர்கள். என்றாலும், வெற்றி, பன்னிரண்டே நாட்களுக்குள், அவர்கள் இருக்குமிடம் தேடி வந்து, அவர்கள் காலடியில் பணிந்து நின்றது என்றால், எப்படி முடிந்தது அந்தக் காரியம்?

நியாயம் அவர்கள் பக்கம் இருந்தது. ஆம்! இதுதான் மேற்கு வங்க ஆசிரியர்கள் வெற்றிபெற்றதற்குரிய முதல் காரணம். ஆசிரியர்கள் கேட்பது நியாயம்தான் என்பதை யாராலும் மறுக்கமுடிய வில்லை. மாத ஊதியம் என்கிற பெயரால் ஐம்பதும், பஞ்சப்படி என்கிற பெயரால் பத்தும் ஆகமொத்தம் அறுபது வெண் பொற் காசுகளைக் கொண்டு மாதம் முப்பது நாட்களையும் எப்படி நாங்கள் ஓட்டமுடியும் என்று அவர்கள் கேட்டார்கள். அந்தக் கேள்வியை, மேற்கு வங்க அரசியலார் உட்பட யாராலும் மறுத்துக்கூற முடிய வில்லை.

நியாயம்தானே அவர்கள் கேட்பது?—பொதுமக்கள் கூறினார்கள்.

எப்படித்தான் போதும் அறுபது காசுகள்?—மாணவத் தோழர்கள் குழுவினர்கள்,

தவறென்ன ஆசிரியர்கள் கேட்பதில்?—எம். எல். ஏ.க்கள் பரிந்து பேசினார்கள்.

இருபதோ முப்பதோ கூடுதலாகக் கொடுக்கத்தான் வேண்டும்—அமைச்சர்களின் உள்ளங்களும், அவர்களைப் பார்த்து இரகசியமாகக் கூறிடலாயின.

---

. . ஆசிரியர்களின் நிலையைச் சீர்தூக்கிப் பார்த்த அத்தனைப் பேரும் அவர்கள் கேட்பது நியாயம்தான் என்பதை மனமார ஒப்புக் கொண்டு விட்டனர். ஆனால் ஒரு காரியம் நியாயமானது என்பதாலேயே அது வெற்றிபெற்றுவிடுவது கிடையாது. நியாயத்தின் பக்கம் போதுமான அளவு பலமும் சேர்ந்தால்தான், நியாயம் வெற்றி பெறுவது இந்த உலகத்தின் வாடிக்கை.

---

இந்த உண்மையை உணராத அந்த ஆசிரியர்கள், நியாயம், தானாகத் தங்களை நோக்கிவரும் என்று இத்தனை ஆண்டுகளாகப் பொறுமையுடன் காத்துக் கிடந்தார்கள், ஆனால் பொறுமை பலன் தரவில்லை. அவர்களுடைய வாழ்க்கைச் சுமை குறையவில்லை. ஊதியம் உயரவில்லை. வறுமையும் அகலவில்லை. நியாயம், அதுவாகத் தங்களை நோக்கி வராது என்பதை அறிந்துகொண்டனர் ஆசிரியத் தோழர்கள். இந்த உண்மையை உணர்ந்ததுதான் தாமதம். இனி, தாங்களாக நியாயத்தை நோக்கிப் போக வேண்டியதுதான் என்கிற முடிவுக்கு வந்து கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். ஊதிய உயர்வு தேவை என்கிற கோரிக்கையை முன்வைத்து, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த 25,000 செகண்டரி ஆசிரியர்களும் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்கள். ஊதியம் உயர்ந்தாலொழியத் தாங்கள் பள்ளிக்குச் செல்வதில்லை என்கிற திட்டமான முடிவுக்கு வந்தார்கள். கட்டுப்பாடாக, ஏகமனதாக, ஒருவர் பாக்கி இல்லாமல் அத்தனை பேரும், வேலை நிறுத்தம் செய்தார்கள். நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களின் கதவுகள் மூடியது மூடியபடியே கிடந்தன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்ல வழியின்றி வீட்டிலேயே முடங்கினார்கள். பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு எப்படிக் கல்வியறிவு புகட்டுவது என்பதை அறியாமல் தத்தளித்தார்கள். ஆளும் கட்சி ஒன்றைத் தவிர ஏனைய எல்லாக் கட்சியினரும் ஆசிரியர்கள் பக்கம் நின்றார்கள். அரசாங்கம் திகைத்தது. அதிகார வர்க்கம் செய்வதறியாது விழித்தது. ஆசிரியர்களின் ஒற்றுமை உணர்ச்சியும், கட்டுப்பாடும் அனைவரையும் வியப்புணர்ச்சிக்கு உள்ளாக்கின. ஆம்! ஆசிரியர்களின் வெற்றிக்கு அவர்கள் காட்டிய

இந்த ஒற்றுமையும் கட்டுப்பாடுமே இரண்டாவது காரணமாக அமைந்தது.

"வேண்டாம் இந்த வீண் வேலை!—உள்ள வேலையைக் கவனி யுங்கள்!"

"இருக்கிற வேலையும் போய்விடும்—ஈடுபடாதீர் இந்தகு ளொர்ச்சிகளில்!

"பயன் ஏதும் இருக்காது—வெறும் கூச்சல்தான் மிச்ச மாகும்!"

"தடியடி, துப்பாக்கி வேட்டு, சிறைவாசம், இத்தனையும் கிடைக்கும்! ஏன் இந்தக் கெடுமதி உமக்கு?"

இப்படியெல்லாம் பலர் மிரட்டினர் ஆசிரியத் தோழர்களைப் பார்த்து.

ஏறத்தாழ 500 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

பற்பல ஆசிரியர்கள்மீது பற்பல வழக்குகள் தொடுக்கப்பட்டன.

ஆசிரியர்களின் ஊர்வலத்தின்மீது அரசாங்கத்தால் கண்ணீர்க் குண்டுகள் வீசப்பட்டன.

தடியடியும் நடத்தப்பட்டது. 144 சட்டமும் வீசப்பட்டது.

போலீசாரின் துப்பாக்கிகளும் தங்கள் ஆற்றலைச் சோதித்துப் பார்த்தன.

அரசாங்கம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக, ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்களில் ஆறுபேர் பிண மாயினர்.

என்றாலும் அணுவும் அஞ்சவில்லை அறப்போர் தொடுத்த ஆசிரி யத் தோழர்கள்.

வேலை நிறுத்தத்தை, அமைதியான முறையில், சட்டங்கள் எவற்றையும் மீறாத வகையில், தொடர்ந்து நடத்தினர்.

ஆசிரியர்கள் காட்டிய இந்த உள்ள உறுதியும் அஞ்சாத நெஞ்சமும்தான், அவர்கள் வெற்றி பெற்றதற்குரிய மூன்றாவது காரணம் என்போம் நாம்.

நியாயம்

ஒற்றுமை

அஞ்சாமை

இந்த மூன்று சக்திகளும் மேற்கு வங்க செகண்டரி ஆசிரியர்கள் பக்கம் இருந்தன. எனவேதான் வெற்றி, அவர்களைத் தேடி வந்தடைந்தது.

மிக மிக மகிழ்கிறோம் நாம். மேற்கு வங்க ஆசிரியர்கள் பெற்ற வெற்றிக்காக அவர்களை மிக மிகப் பாராட்டுகிறோம்.

மேற்கு வங்க ஆசிரியர்களைப் பாராட்டுகிற அதே நேரத்தில், மேற்கு வங்க அரசாங்கத்தாரின் போக்கைக் கண்டு நாம் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை.

தடியடி—துப்பாக்கி வேட்டு—கண்ணீர்ப்புகை—சிறைச்சாலை வாழ்வு—இத்தனையையும் ஆசிரியர்களுக்குத் தந்தபிறகுதானா அவர்களுக்கு ஊதிய உயர்வைத் தருகின்ற மனப் பக்குவம் அந்த அரசாங்கத்திற்கு ஏற்படவேண்டும்?

ஆசிரியத் தோழர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னதாகவே இந்த ஊதிய உயர்வைக் கொடுக்க அரசாங்கத்தார் தாமாக முன்வந்திருந்தால் எத்துணை நன்றாக இருந்திருக்கும்?

ஏனோ தெரியவில்லை! இத்தகைய மனப் பக்குவமும், காலமறிந்து காரிய மாற்றுகிற பண்பும், ஆசிரியர்களின் ஊதியத்தைப் பொறுத்த வரையில், வங்க மாநில ஆட்சியாளர்கட்கு மட்டுமல்ல, சென்னை மாநில ஆட்சியாளர்களுக்குக் கூட இன்னமும் ஏற்படவில்லை.

வங்க மாநில நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகாவது சென்னை மாநில அரசாங்கத்தின் உறக்கம் நீங்கும் என்றும், ஆரம்ப ஆசிரியர்களின் வேதனையை அது உணர முன்வரும் என்றும், அவர்களின் மாத ஊதியத்தை ஓர் இருபது ரூபாயாவது அதிகப்படுத்த முனையும் என்றும் நாம் நம்புகிறோம்.

நம் நம்பிக்கை பலன் தருமா?

# புதியதோர் உத்தரவு-
# பெரியதோர் ஆபத்து

"ஊதியத்தைச் சற்றே உயர்த்துக!" பணிவுடன் கேட்கிறார்கள்.

"இந்தா புதியபுதிய ஆபத்து"—ஆவேசத்துடன் அளிக்கிறார்கள் சென்னை மாநில அர்சாங்கத்தார்.

ஆசிரியர்கள் கேட்பதோ ஊதியஉயர்வு. அரசாங்கத்தார்கொடுப்பதோ அடுக்கடுக்காக ஆபத்துகள்.

இது மிகவும் விசித்திரமான நிலை. ஆனால் இப்படிப்பட்ட நிலையில்தான் சிக்கிச் சிதைகிறார்கள் இன்றைய ஆரம்ப ஆசிரியர்கள்.

ஐந்து மணி நேர வேலையை ஆறு மணி நேரமாகவும், ஐந்து நாள் வேலையை ஆறுநாள் வேலையாகவும், உயர்த்திக் கொடுத்திருக்கிற புதிய கல்வித்திட்டம், ஆசிரியர்கள் மீது வீசப்பட்ட முதற் பெரும் ஆபத்து.

அந்த ஆபத்தின் தாக்குதலிலிருந்து இன்னமும் மீளவில்லை ஆரம்ப ஆசிரியர்கள். இதற்குள்ளாக மற்றொரு பெருந் தாக்குதலை அவர்கள் மீது நிகழ்த்தத் தொடங்கிவிட்டது ராஜாஜி சர்க்கார்.

"மாவட்டக் கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் வேலைபார்க்கும் ஆசிரியர்கள் அல்லது தலைமை ஆசிரியர்களில் ஒருவரின் நடத்தை அல்லது ஒழுக்கம் மோசமானதென நிரூபிக்கப்பட்டால், அல்லது அவர் தன் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அல்லது அவர் நாசவேலைகள் எவற்றிலேனும் ஈடுபட்டதாக கண்டுபிடிக்கப்பட்டால், அவரது சர்டிபிகேட்டை டி. விஷனல் இன்ஸ்பெக்டர் எந்தச் சமயத்திலும் சஸ்பெண்டு செய்யலாம். கல்லூரி கிரேடு நீங்கலாக வேறெந்த கிரேடையும் சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகள், அவ்வாறு அவரால் சஸ்பெண்டு செய்யப்படலாம்"

என்பதாக, சென்னை அரசாங்கக் கல்வி விதிகளின் 154—வது பிரிவு, பிப்ரவரித் திங்கள் முதல் வாரத்தில் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறதே, இந்த விபரீதம் நிரம்பிய விசித்திரத்தைத்தான், ஆசிரியர் உலகுக்கு ஏற்பட்டிருக்கிற புதியதோர் ஆபத்து என்று நாம் கருதுகிறோம்.

யாரேனும் ஓர் ஆசிரியர் ஒழுக்கக் குறைவாக நடந்துகொண்டால் அவருடைய சர்டிபிகேட்டை சஸ்பெண்டு செய்வது முறையான காரியம்.

அதுபோலவே, எவரேனும் ஓர் ஆசிரியர் தன் கடமைகளைச் சரியான முறையில் நடத்தா விட்டால், அவருடைய சர்டிபிகேட்டை சஸ்பெண்டு செய்வதும் நியாயம்.

இந்த இரண்டு காரணங்களில் ஏதொன்று இருந்தாலும், ஆசிரியர்களின் சர்டிபிகேட்டை சஸ்பெண்ட் செய்யலாம் என்று ஏற்கனவே இருந்துவந்த 154-வது பிரிவு தெரிவிக்கிறது.

ஆனால் அப்போது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிற 154-வது பிரிவோ, இந்த இரண்டு காரணங்களுக்காக மட்டுமல்லாமல், ஓர் ஆசிரியர் நாசவேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவருடைய சர்டிபிகேட்டை சஸ்பெண்ட் செய்யலாம் என்று தெரிவிக்கிறது.

ஆனால் நாசவேலை என்கிற சொற்றொடர் எந்தப் பொருளில் இந்த விதியில் இணைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கம் இதுவரை எந்த அமைச்சராலும் தரப்படவில்லை.

நாசவேலை என்றால் என்ன பொருள்? தண்டவாளத்தைப் பெயர்ப்பது—தந்திக் கம்பிகளை அறுப்பது—அரசாங்க ரிகார்டுகளைக் கொளுத்துவது—அதிகாரிகள் முகத்தில் திராவகத்தைக் கொட்டுவது—ஓடும் ரயிலைக் கவிழ்ப்பது முதலாக உள்ள இக்கரு செயல்களா?

இத்தகு செயல்களுக்குத்தான் நாச வேலை என்கிற சொற்றொடர் பொருத்தம் என்று கருதி, அந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டுதான், இந்தச் சொற்றொடர் கல்வி விதிகளில் இணைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்தத் தொடர் இந்த விதிகளில் இணைக்கப்பட்டிருப்பதில் நமக்கு எத்தகைய ஆட்சேபனையும் இல்லை.

தண்டவாளத்தைப் பெயர்ப்பதிலேயும், தந்திக்கம்பிகளை அறுப்பதிலேயும் ஆரம்ப ஆசிரியர்கள் எவரும் ஈடுபட்டிருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட மகானுபாவர்கள் யாராவது ஆசிரியர் உலகில் இருப்பார்களானால் அத்தகையவர்களின் சர்டிபிகேட்டுகள் சஸ்பெண்ட் செய்யப்படவேண்டியதுமிகமிக நியாயம்.

ஆனால் நாசவேலை என்கிற சொற்றொடர் இந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டு கல்வி விதிகளில் நுழைக்கப்பட்டிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை.

அரசாங்கத்தின் கருத்துகளுக்கு மாறான கருத்துகளைப் பரப்பிவரும் பணிகளைத்தான் நாசவேலை என்கிற சொற்றொடரின் கீழ்க் கொண்டுவர எண்ணுகிறார்கள் அரசாங்கத்தார்.

தங்கள் கட்சிக் கொள்கைகளுக்கு மாறான கொள்கைகளைக் கொண்டிருக்கும் ஆசிரியத் தோழர்களைப் பழிவாங்குவதற்காகவே இந்தச் சொற்றொடர் நுழைக்கப்பட்டிருக்கிறது என்று நாம் கருதுகிறோம்.

புதிய கல்வித் திட்டத்தின் பழ் யல கோணல்களை எடுத்துவிளக்குபவர்கள், அந்தத்திட்டத்தின் நடைமுறையால் நாட்டின் நன்மைக்கு ஏற்படக்கூடிய கேடுகளை அலசிக் காட்டுபவர்கள், கல்வித் துறையின் சிறப்பு குன்றுமளிக்க அந்தத்திட்டம் தொலைந்தே தீர வேண்டுமென்று இடி முழக்கம் எழுப்புபவர்கள், இப்படிப்பட்ட ஆசிரிய அன்பர்களின் தொழிலுக்கு உலைவைக்கவே இந்தச் சொற்றெடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நாம் எண்ணுகிறோம்.

அர்த்தமற்ற திட்டத்தைக் காபாற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற ஓர் அவசியமற்ற சொற்றெடர் இது என்று நாம் குறிப்பிட்டால், அதனை முற்றிலும் தவறு என்று எவரும் கூறிட இயலாது.

பேச்சுரிமையும் எழுத்துரிமையும் இந்திய மக்கள் அனைவருக்கும் உண்டு என்று தெள்ளத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது இந்திய அரசியல் திட்டம்.

என்றுலும் சென்னை மாநில அரசாங்கத்தார், ஆசிரிய உலகத்தின் கருத்துக்கு வாய்ப் பூட்டுப் போடுவதற்காக இப்படியெல்லாம் மறைமுகமான முயற்சிகளில் ஈடுபடுவதுமுற்றிலும் வருந்தத்தக்க காரியமாகும்.

இப்படிப்பட்ட அடக்குமுறை உத்தரவுகளின் மூலமாக ஆசிரியர்களின் கருத்துக்களை அழித்து ஒழித்துவிடமுடியும் என்று அரசாங்கம் நம்பினால் அதைவிடத் தவறுன நம்பிக்கை வேறென்று இருக்கமுடியாது.

அடக்குமுறை ஒரு விசித்திரமான சக்தி. அது யார்மீது விழுகிறதோ, அவர்களுடைய பலம், முதல் தாக்குதலுக்குப் பிறகு மும்மடங்காக வளருமேதவிர, அடக்குமுறைக்கு ஆளாகி அழிந்து மறைந்து விடாது.

நியாயமான ஒரு கருத்தை, யார்தானுகட்டும், எவ்வளவுதான் அடக்கிபார்த்தாலும், அதனுல் அந்தக் கருத்து மாண்டுவிடாது. சுருண்டும்போகாது. அடக்க அடக்க ஓங்கி எழும்பந்துபோல, அடக்குமுறை வலுக்க வலுக்க, நியாயத்தின் பலம் ஓங்கி ஒளி வீசத்தான் செய்யும்.

இப்படிப்பட்ட மறைமுகமாக மன அடக்குமுறைகளின் விளைவாகப் புதிய கல்விதிட்டத்தை நிலை நாட்டி விடமுடியும் என்று அரசாங்கத்தார்நம்பிக்கைகொண்டிருந்தால் அந்த நம்பிக்கையில் மண் விழுவதும் உறுதி.

புதிய கல்வித் திட்டம் பிற்போக்குக் கருத்துக்களின் உறைவிடம். எனவே அது இந்த முற்போக்கு சகாப்தத்தில் நிச்சயமாக வாழமுடியாது.

ஆயிரம் உத்தரவுகள் அந்தத் திட்டத்தைக் காப்பாற்றஓடோடி வந்தாலும் சரி, அந்தத்திட்டம், இன்றில்லாவிட்டாலும் நாளை,

(11-ம் பக்கம் பார்க்க)

# செய்திச் சுருள்

மலபார் மாவட்ட தொடக்கப் பள்ளி ஆசிரியர் கழகத்தின் சார்பில் 30 ஆசிரியர்கள் கொண்ட தூதுக் குழு ஒன்று, பிப்ரவரி 26-ம் நாளன்று, சென்னை நகருக்கு வந்து, முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியாரைச் சந்தித்து மனு ஒன்றைச் சமர்ப்பித்திருக்கின்றனர். அதே தேதியில், சட்டசபை கூடிக்கொண்டிருந்த நேரத்தில், சட்ட மன்றத்தின் கட்டிடத்திற்கு முன்பு, அந்த முப்பது ஆசிரியர்களும், ஊர்வலமாக வந்து, புதிய கல்வித் திட்டம் ஒழிந்தே தீரவேண்டும் என்கிற வீர முழக்கத்தை எழுப்பியிருக்கின்றனர். அவர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கொண்ட அட்டைகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டு இருந்தனர். அந்த அட்டைகளில், புதிய கல்வித் திட்டம் கவைக்குதவாதது என்னும் கருத்தும், ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தை குறைந்தது 50 ரூபாயாக ஆக்குக என்னும் குறிக்கோளும் சிறப்புள்ள வகையில் • பொறிக்கப்பட்டிருந்தன. அமைச்சர் ஆச்சாரியாரிடம் அவர்கள் சமர்ப்பித்துள்ள மனுவில் கீழ்க்கண்ட வாக்கியங்கள் முக்கியமான இடம் பெற்றுள்ளன என்று தெரிய வருகிறது.

"பாருலேகர் நிபுணர் குழுவினர் செய்துள்ள சிபார்சை நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கக் கல்வி அதிகாரிகள் போட்டுள்ள உத்தரவின்படி, பெரும்பாலான ஆரம்ப ஆசிரியர்கள் வேலையை இழந்து தீர வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பது உறுதி."

"சர்க்காரிடமிருந்து மானியம் பெறத் தகுதி உடைய ஆசிரியர்கள், இப்பொழுது சராசரி 20 மாணவர்களுக்கு ஒருவர் வீதம் பாடம் புகட்டி வருகின்றனர். இந்தத் தொகை, தொடர்ந்தாற் போல, ஒவ்வோர் ஆண்டும், 30—40—50 என்கிற முறையில், 1954—1955—1956-ம் ஆண்டுகளில் கூட்டப்படவேண்டும் என்று அரசாங்க உத்தரவு குறிப்பிடுகிறது."

"இதன் விளைவாக, 1954-ல் ஆசிரியர் தொகை 18,036 ஆகவும், 1955-ல் 13,526 ஆகவும், 1956-ல் 10,801 ஆகவும், குறைந்து போக இடமேற்படும். அதாவது முதல் ஆண்டில் 3609, இரண்டாம் ஆண்டில் 4509, மூன்றும் ஆண்டில் 2706 என்கிற முறைப்படி மொத்தம் 10,844 ஆசிரியர்கள் வேலையிழக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

தூதுக் குழுவினரின் இந்த மனு முதலமைச்சர் ஆச்சாரியாருக்கு மட்டுமல்லாமல், கல்வியமைச்சர் சுப்ரமண்யனார், சட்ட அமைச்சர் குட்டி கிருஷ்ண

நாயர் ஆகியவர்களிடமும் தரப் பட்டிருக்கின்றனவாம். பாருலேகர் சிபார்சின் முக்கிய விளைவு, பத்தாயிரம் ஆசிரியர்களின் வேலை பறிபோவதே என்பதை தூதுக் குழுவினர் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டினாராம்.

* * *

சென்னை மாநில அரசாங்கத்

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

உதறி யெறியப்படுவது உறுதியினும் உறுதி.

ஆகவே அப்படிப்பட்ட அர்த்தமற்றதோர் திட்டத்தைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட விபரீத உத்தரவுகளைப் பிறப்பித்து, ஆசிரியர்களின் பேச்சுரிமையைப் பறிப்பது முறையான செயல் அல்ல என்பதை அரசாங்கத்தாருக்கு அன்புடன் மட்டுமல்ல, பணிவுடனும் பாசத்துடனும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

புதிய விதியின் விபரீதப் போக்கு திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

நாசவேலை என்றால் என்ன என்பது தெள்ளத் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

இந்த இரண்டு செயல்களையும் அரசாங்கத்தார் செய்து முடிக்காதவரையில், இந்தப் புதிய விதிகளை அவர்கள் ஏதோ ஒருவகைத் தவறான உள் எண்ணத்தோடு கொண்டு வந்திருப்பதாகத்தான் நாடு கருதும்.

தின் 1954—55-ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர் திரு. சுப்ரமண்யத்தால் பிப்ரவரி 26-ம் நாளன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி, சென்னை அரசாங்கத்தின் 54–55-ம் ஆண்டிற்குரிய மொத்த வருமானம், ரூ. 44, 59, 88,000. மொத்த செலவு, ரூ. 45, 17, 88,000. ஆகவே, வரவை விட செலவு 58 லட்சம் ரூபாய் அதிகம். இந்த அதிகப்படி செலவைச் சரிக்கட்டுவதற்காக, இந்த ஆண்டில் ஆறு புதிய வரிகள் விதிக்கப்படும். அவை யாவன: (1) ரூ. 500-க்கு மேல் நிலவரி செலுத்துகிற பட்டாதாரிக்கு வரித்தொகை உயர்த்தப்படுகிறது. (2) காபி, தேயிலை, ரப்பர், ஏலக்காய்த் தோட்டங்களுக்கு நில வருமான வரி போடப்படுகிறது. (3) புதிய நீர்ப்பாசன நிலங்களுக்கு அபிவிருத்தி வரி (4) கோர்ட்டு கட்டணங்கள் அதிகரிப்பு (5) தங்கம், வெள்ளி, வைரம், இமிடேஷன் கற்கள் முதலியவற்றின் விற்பனை வரி அதிகரிப்பு. (6) மில் துணிகளுக்கு, ஏற்கனவே உள்ள விற்பனை வரி நீங்கலாக மேற்கொண்டு ரூபாய்க்கு 0–1–3 அணு வீதம் அதிகப்படியான விற்பனை வரி வசூலிக்கப்படும்.

ஆனால் அதே சமயத்தில் கீழ்க்கண்ட வரிச் சலுகைகளும் செய்யப்படும். (1) மீன், முட்டை, காய்கறி, பழம் இவற்றிற்குரிய விற்பனை வரி ரத்து செய்யப்படும்.

(2) கைத்தறித் துணிகளுக்கு இனி விற்பனை வரி கிடையாது.

* * *

பிப்ரவரி 27–ம் நாளன்று, அனைத்திந்திய அரசாங்கத்தின் அடுத்த ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை, அந்த அரசாங்கத்தின் நிதி அமைச்சர் திரு. தேஷ்முக், அனைத்திந்தியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த வரவு செலவுத் திட்டத்தின்படி, அரசாங்கத்தின் அடுத்த ஆண்டிற்குரிய மொத்த வருமானம், 441 கோடி ரூபாய். மொத்த செலவு, 467 கோடி ரூபாய். ஆகவே, வரவைவிட செலவு 26 கோடி ரூபாய் அதிகம். இந்த அதிகப்படி செலவைச் சரிக்கட்டுவதற்காகக் கீழ்க் கண்ட புதிய வரிகள் விதிக்கப்படும். (1) பாக்குக்கு உள்ள இறக்குமதி பவுண்டுக்கு $6\frac{1}{2}$ அணு வீதம் அதிகரிக்கப்படும். (2) மிகச் சன்னரக பருத்தித் துணிக்கு கெஜத்திற்கு அரையணு வீதமும், முரட்டுத் துணி—மத்திய ரக துணிக்கு கெஜத்திற்குக் காலணு வீதமும் எக்சைஸ் வரி அதிகமாக்கப்படும். (3) சிமட்டி, சோப்பு, செருப்பு ஆகியவற்றின் மீதுள்ள எக்சைஸ் வரி பத்து சத விகிதம் உயர்த்தப்படும்.

* * *

திரு. எஸ். வி. ராமமூர்த்தி, ஜஸ்டிஸ் சத்யநாராயணராவ், திரு. நீலம் ரங்கநாதம் ஆகிய மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக ஆந்திர மாநில அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட மதுவிலக்கு திட்ட விசாரணைக் குழு பிப்ரவரி மாதத்தில் தன் அறிக்கையை ஆந்திர அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துவிட்டது. அந்த அறிக்கையில், ஆந்திர மாநிலத்தில், மதுவிலக்குத் திட்டம் தோல்வியடைந்து விட்டது என்றும், பெர்மிட் இல்லாமலே வேண்டுபவர்கள் கள் அருந்தும்படி விட்டு விடுவதே நல்லது என்றும், லைசென்ஸ் பெற்று நடத்தப்படும் மது பானக் கடைகளில் மட்டும் தான் கள் அருந்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யலாமென்றும், சாராயத்தைப் பொறுத்த வரையில், ஓர் ஆளுக்கு ஒரு நாளைக்கு இவ்வளவு இவ்வளவு என்கிற பங்கீடு முறையை ஏற்படுத்தலாமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மேலிடத்தின் முடிவு தெரிந்த பிறகு, ஆந்திர மாநிலத்தில், மதுவிலக்குத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பதை அந்த மாநில அரசாங்கம் முடிவு செய்யும் என்பதாகத் தெரிகிறது.

* * *

புதிய கல்வித் திட்டம் கிராமப் பகுதிகளில் எழுத்தறிவின்மையை மேலும் வளர்க்குமே தவிர குறைக்காது என்றும், ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாக வாபீஸ் வாங்குவது மிகவும் அவசியம் என்றும், ஆந்திர மாநில கிருஷிக்லோக்

(14–ம் பக்கம் பார்க்க)

# பொழுது போக்கு
## (நண்பனுக்கோர் கடிதம்)
[தென்னுப்பிரிக்கா—டர்பன்-திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

அன்புமிக்க நண்பனுக்கு,

“டர்பனிலே, கல்லூரியிலே, நான்கு வருஷங்கள் படித்து விட்டு, ஒரு கிராமத்திலே எப்படியடா காலத்தைக் கழிக்கிருய்?” என்று சமீபத்தில் வந்த கடிதத்தில் ஒரு கேள்வி கேட்டிருந்தாய். ஏதோ ‘கன்னு பின்னு’ வென்று அசட்டுக் கேள்விகள் கேட்காமல் இந்த மாதிரி ஒரு நல்ல கேள்வியாவது கேட்டாயே! அது பற்றிச் சந்தோஷம்; நண்பன் இவ்வளவு நல்ல கேள்வி கேட்டிருக்கிருனே என்று பெருமையுங்கூட. இவ்வளவு நல்ல கேள்விக்குப் பதிலளிக்காவிட்டால், என்னைச் சோம்பேறி என்று மட்டுமல்ல; அசடு என்றுகூட நீ கூப்பிடலாம். இப்படியெல்லாம் கூப்பிட்டாலும் நானென்னமோ கோபித்துக்கொள்ளப் போவதில்லை. நீ என்னுடைய நண்பனுயிற்றே. பிரியத்திலோ, நல்ல நோக்கத்துடனே நீ திட்டினுல், அதை நான் பொறுத்துக்கொள்ள வேண்டியது என் கடமையல்லவா? இந்தக் கடமையைப் பலர் உணர்வதேயில்லை. அதனுல் எவ்வளவோ பேர்களின் நட்பு முறிந்து விடுகிறது. நீ என்னைத் திட்டவேண்டிய நிலைமையில் நானில்லை. உன்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லிவிடுகிறேன். பதிலைப்பார்த்தால் விளக்கெண்ணெய் சாப்பிடுவது போலிருக்காது என்று உத்திரவாதம் தருகிறேன். உள்ளது உள்ளபடி எழுதியிருக்கிறேன். எப்படியிருக்கிறது என்று தீர்மானிப்பது உன்னுடைய பொறுப்பு.

டர்பனிலே, பொழுது போக்கச் சினிமா யிருக்கிறது; ‘பீச்’ இருக்கிறது; வாசகசாலை இருக்கிறது; கிளப் இருக்கிறது. இன்னும் எத்தனையோ வசதிகள், அவ்வாவர் மனப் போக்குக் கேற்றபடி இருக்கின்றன. ஆனுல், இந்தக் கிராமத்திலே அவைகளெல்லாம் ஒன்றுமில்லை. மொத்தம் ஐம்பது வீடுகள்தான். ஏழாவது எட்டாவது படித்த இளைஞர்கள்கூட இங்கு கிடையாது. ஒரு சிலர் நான்காவது, ஐந்தாவது வரை படித்திருக்கிருர்கள். மற்றவர்கள் தற்குறிகள். நான் ஒருவன்தான் பட்டதாரி.

முதன் முதலில் இந்தக் கிராமத்திலே பொழுதுபோக்குவது கடினமாயிருந்தது. இந்தக் கிராமத்தைவிட்டு வேறு எங்காவது போய்விடலாமா என்றுகூடத் தோன்றிற்று. ஆனுல் என்னுடைய பெற்ருேர்களுக்குச் செய்யவேண்டிய கடமை, என்னை அவ்வாறு போகமுடியாமல் தடுத்துவிட்டது. இச்தச்

சமயத்தில் மனிதனுப் பிறந்த ஒவ்வொருவனுக்கும், பணக்காரனுயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, பட்டணத்தில் இருந்தாலும் சரி, பட்டிக்காட்டில் இருந்தாலும் சரி, ஒரு

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி, பிப்ரவரி மாதம் 25-ம் நாளன்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

* * *

மத்திய அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டிருக்கிற தேசீய வருமானக் குழுவினர், தாங்கள் செய்துள்ள ஆராய்ச்சியின் விளைவாக, சராசரி இந்தியனின் ஓராண்டு (The Percapita Income) ரூபா 265 என்று அறிவித்திருக்கிறுர்கள்.

* * *

சிற்சில நாடுகள் அதனை எதிர்த்த போதிலுங்கூட பாகிஸ்தானத்திற்கு ராணுவ உதவியை அளிக்க அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்து விட்டதாக அமெரிக்காவின் தலைவர் ஐசனேவர், பிப்ரவரி 26-ம் நாளன்று அறிவித்திருக்கிறுர்.

* * *

பாகிஸ்தானமும் துருக்கியும் சென்ற மாதம், பரஸ்பரப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருக்கின்றன. இந்த ஒப்பந்தத்தில் தாங்களும் சேர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாக ஈராக் நாட்டுப் பிரதமரும் அறிவித்திருக்கிறுர்.

* * *

பொழுதுபோக்கு அவசியம் என்று உணர்ந்தேன். எந்த வகையில் பொழுதுபோக்கினுல் நன்மையுண்டு என்பதுபற்றி யோசித்தேன்.

---

தோட்டம் இருக்கிறது, காலையிலிருந்து மாலைவரை சுற்றிவர; பணம் இருக்கிறது, உல்லாசமாக 'டம்பாச்சாரித்தனம்' செய்ய; ஏன் இந்த முறையைக் கையாளக் கூடாது? என்ற சிந்தனை எழுந்தது.

சிந்தித்து, சிந்தித்து, அந்த சைய வாழ்க்கையால் பயனென்றுமில்லை யென்றுணர்ந்து, "சே, இந்தப் பிழைப்பு நமக்கு வேண்டாம்"; வாழ்க்கையை நல்ல முறையில் பயன்படுத்த வழிகளென்ன என்பதைப் பற்றி யோசிக்கத் தொடங்கினேன். கடைசியில் இந்த முடிவுக்கு வந்தேன். அந்த முடிவின்படிதான் இன்னும் நடந்து வருகிறேன். இப்பொழுது பொழுது போவது கஷ்டமாகவே தெரிவதில்லை!

பட்டம் பெற்ற நான், எழுத்து வாசனையே அறியாத கிராமவாசிகளிடம் பழகுவதை அநாகரீகமாகக் கருதவில்லை. அவர்களும் நம் சகோதரர்கள் தானே? சகோதரர்களை வெறுப்பவன் உருப்படுவானு?

---

சிந்தனையின்றிச் 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று வாழும் அவர்களைச் சிறிதாவது தங்களைப் பற்றியல்ல, இந்தப் பரந்த உலகத்தைப் பற்றி—சிந்திக்

கும்படி செய்ய வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு அவர்களுடன் ஒன்றிப் பழக வேண்டும்; அவர்களுடைய பேச்சை நன்றாகக் கற்றுக்கொள்ளவேண்டும். பிறகு, அவர்களுக்கு நாம் என்ன சொல்ல விரும்புகிறோமோ, அதனை அவர்களுடைய பாஷையிலேயே சொல்லவேண்டும். மெள்ள மெள்ள இந்தப் பரந்த உலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு உண்டானதும், அந்த ஆர்வம் மேன்மேலும் வளர வழிகாட்ட வேண்டும். இந்த முயற்சியில் நான் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறேன் என்று மார்பு தட்டிச் சொல்கிறேன். படித்த இளைஞர்களிற் சிலர் இந்த மாதிரி கிராமங்களில் தங்கிச் சீர்திருத்தம் செய்தால்தான், நாடு முன்னேற்றம் அடையும்.

அறிஞர்கள், "கிராமத்திற்குச் சென்று சேவை செய்யுங்கள்" என்று சொல்வது 'வெறும் அலங்கார வார்த்தைகள்; நடைமுறையில் சாத்தியமல்ல' என்று பலர் கூறுகின்றனர். இப்படிக் கூறுவோரின் அபிப்பிராயம் என்னவென்றால், கிராமத்துச் சனங்கள் மண்டூகங்கள்; அவர்களைச் சீர்திருத்தவே முடியாது என்பது தான். ஆனால் உண்மையில் நிலைமை அப்படியில்லை.

அவர்கள், குழந்தைகளைப் போல் தெளிந்த உள்ளமுடையவர்கள்; அன்பு நிறைந்தவர்கள். வறுமையின் காரணமாக மூடப் பழக்கங்களுக்கும் அறியாமைக்கும் அவர்கள் ஆளாகி விடுகிறார்கள். சூழ்நிலை சரியாயிருந்தால், ஏன் மனிதன் மனிதனாக வாழமுடியாது? நல்ல சூழ்நிலையை உண்டாக்குவது படித்தவர்களின் கடமை.

இது தவிர, கிராமத்தைச் சுற்றியுள்ள இயற்கையின் எழிலில் தோய்ந்து தோய்ந்து சித்திரங்களாகத் தீட்டி வைத்திருக்கிறேன். இயற்கையை மட்டுமல்ல; கிராமவாசிகளின் வாழ்க்கையைக் கூட எழுத்தோவியங்களாகச் சித்தரித்து வைத்திருக்கிறேன். இவைகளை நீ பார்க்க வேண்டுமே!

இப்பொழுது தெரிந்ததா, எப்படிப் பொழுது போக்குகிறேன் என்று? நீயும்தான், பட்டணத்தில் இருக்கிறேன் என்று பெருமைப்பட்டு என்ன பயன்? என்னைப்போல் உபயோககரமான காரியங்கள் ஏதாவது செய்திருக்கிறாயா?

மனிதன் தனிமையில் கஷ்டப்படும் பொழுது, அதனை மறக்க நல்ல காரியங்களைச் செய்கிறான்; சிலர் கெட்ட காரியங்களைச் செய்வதுண்டு; அது விதி விலக்கு. கடிதம் நீண்டு விட்டது; இதுவும் ஒரு விதி விலக்குத்தான். பிறபின்; வணக்கம்.

உனதன்பிற்குரிய

**ஜெயபாலன்**

# எமது புதிய வெளியீடுகள்

---

**வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்** என்ற பெயரால் முதல் வகுப்பு முதல். ஏழாம் வகுப்பு வரை, இவ்வாண்டு நமது அலுவலகத்தில் புதிதாக பாடபுத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவையனைத்தும் அரசியலாரால் அங்கீகரிக்கப்பட்டவை. இவைகளைப் பற்றிய முழு விளக்கம் நமது பத்திரிகையின் மேல் தாளில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

இவை $\frac{1}{8}$ டிம்மிசைசில் ($\frac{1}{8}$ Dimmy Size) அளவில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தற்கால சுதந்தர நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, விஞ்ஞான வளர்ச்சிக்கு தகுந்தாற்போல், புதிய புதிய பாடங்களும், பிள்ளைகளின் மனதைக் கவரும் வண்ணம் பற்பல பாடங்களும் புதிய பாட புத்தகங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நமது சங்க வாசகங்களை வைத்து ஆதரித்து வந்த ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கேற்ப இப்புதிய வெளியீட்டைக் கொண்டு வந்திருக்கின்றோம். சங்க வாசகங்களை மாற்றவேண்டுமென்ற கருத்துடைய ஆசிரியர்கள், **வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை** வைத்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர், ஆரம்பக்கல்வியில் குறிப்பிட்ட அளவுக்கு, தொகையை அனுப்பி மாதிரிப் பிரதிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் எல்லா வகுப்புகளுக்கும் எல்லாப் பாடப் புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள், சுமார் 24 பிரதிகளுக்கு ரூபாய் நான்கு M. O. அனுப்பவும். 24 புத்தகங்களையும் ரெயில்வே பார்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். M. O. அனுப்பும்போது அவசியம் ரெயில்வே நிலையத்தின் பெயரைக் குறித்தனுப்பவும். ரெயில்வே நிலையம் அருகில் இல்லாதவர்கள் அல்லது 24 புத்தகங்களையும் ரிஜிஸ்டர் புக் போஸ்ட் மூலம் அனுப்பப்படவேண்டுமென்று விரும்புபவர்கள் தபால் கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கும் காரணத்தால் ரூபாய் 5 M. O. அனுப்பவும்.

மானேஜர்

**ஆரம்பக்கல்வி அலுவலகம் சென்னை—1.**

**Post Box No. 1818**

# குழந்தை வளர்ச்சியைக் கெடுக்கும் திட்டம்

## டாக்டர் மணவாளனாரின் வீரமுழக்கம்

ஈரோட்டில் 24–1–1954 ஞாயிற்றுக்கிழமை நடந்த துவக்கப் பள்ளிக் கல்வி புதிய திட்ட எதிர்ப்பு மாநாட்டில் தலைமை தாங்கிய கல்வித்துறைப் பேரறிஞர், அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் உயர் திருவாளர் **டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம்** அவர்கள் **M. A. Ph. D. (Lond) D. I. C; F. R. M. S.** ஆற்றிய தலைமைப் பேருரை :—

* * *

"தாய்மார்களே! பெற்றோர்களே! தோழர்களே!

இந்த மாநாட்டிலே தலைமை தாங்க, நான் ஒப்புக்கொண்டதற்குக் காரணம், கல்வி ஓர் அரசியல் விஷயம் என்று நான் கருதாமையேயாகும். இந்தப் படிப்பு விஷயத்திலே எல்லாப் பெற்றோர்களும் அவர்கள் எத்தகைய அரசியல் கொள்கையர், கோட்பாட்டினர், கட்சியினராயினும் மிக மிக அக்கறை ஜீவாதாரப் பொறுப்பு கொண்டவர்களாவர்; நுணுக்கமாகக் கவனம் செலுத்தக் கடமைப்பட்டோராவர்.

இந்நாள் சின்னஞ் சிறு குழந்தைகள்—வருநாள் நாட்டுக் குடிகள்—நாடாள் பொறுப்பாளர்—மக்கள் இனத்தில் எதிர்காலத்தை அமைக்கும் பொறுப்பாளிகள் இவர்கள். இன்று ஏதாவது தவறான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டால், இதன் தகாத விளைவுகள்—கேடுகள் 15–20 ஆண்டுகளுக்குப் பின்னும் நீடித்திருக்கும். அப்போது இந்தத் தவறை நீக்குவதென்றால் மிக மிகக் கடினமாகும். இதைச் செப்பனிட ஒருதலைமுறையோ அல்லது அதற்கு மேலும் பிடிக்கலாம்.

படிப்புத் துறையிலே ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமானால்—மாற்றம் செய்யவேண்டுமென்றால் சீர் திருத்தம் செய்யவேண்டுமானால், அதன் எல்லா அம்சங்களையும் தீர ஆராய்ந்து ஆலோசிக்கவேண்டும். பல்லோருடைய கருத்துக்களையும் அறிந்து அவற்றைச் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும்-பெற்றோர், ஆசிரியர்கள், இன்னும் சொல்லப்போனால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்பையும் உறுதிப்பட பெற்றாகவேண்டும்.

---

எதிர்ப்பின்றி எந்தவகை 'சீர் திருத்தமும் நடைபெறுவதில்லை என்பதும் ஓரளவுக்கு உண்மை

தான். ஆனால், இத்தகைய எதிர்ப்பு, பெரும்பாலும் பல சந்தர்ப்பங்களிலும் ஒரு சில சுயநலமிகள்—சுயகாரியக் கருத்தினர் அல்லது சிறுபான்மையாளரான வைதீகர்கள் ஆகியவர்களிடம் இருந்துதான் ஏற்பட்டுள்ளது.

## மக்கள் துடிப்பு

சீர்திருத்தம்—முன்னேற்ற நன்முறை மாற்றம் ஏற்படவேண்டும்—ஏற்படுத்தவேண்டும்—ஏற்பட்டாகவேண்டும் என்று நாடு—நாட்டு மக்கள் ஆர்வங்கொண்டு துடிக்கின்றனர். இதைக் கண்டு அத்தகைய மாற்றம் செய்ய, முற்பட்டால், ஒரு சிறு எண்ணிக்கையாளரான, மிக மிகக் குறைந்த மைனாரிட்டியான-பிற்போக்கினர் அல்லது பழமை விரும்பிகள் (வைதீகர்கள்) எதிர்க்க முற்படலாம்.

ஆனால், இப்போது நமது கவனத்திற்குள்ளான இந்த விஷயமோ—துவக்கப் பள்ளிப் படிப்புப் பற்றிய புதிய நடவடிக்கையோ—மேலே கூறப்பட்ட உதாரணத்துக்கு மாறான போக்கைக் கொண்டுள்ளது. அதாவது, இந்தப் புதிய கல்வித் திட்டம், இப்போதைய சர்க்காரின் ஒரு ஒற்றை நபரின் தனி நிர்வாக உத்தரவின்மீது நுழைக்கப்படுவதாகும். இந்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் வற்புறுத்தினர் இந்த விஷயத்தை சட்டசபையிலே விவாதிக்கவேண்டும் என்பதாக. கொறடா ஆடிப் பார்த்தது. கட்சிக் கட்டுப்பாடு தலை நீட்டிப் பார்த்தது. இருந்தும் அங்கும் கூட இதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. திட்டவட்டமான கருத்து வேற்றுமை உரங்கட்டி நிற்கிறது. இப்போதோ இது, சபாநாயகரின் ஓட்டு வியாக்யான சந்தேகத்திலே தவித்துக்கொண்டிருக்கிறது.

## எதிர்ப்பு

கல்வித் துறையில் அனுபவ வல்லுநர் சபைகளான ஆசிரியர்கள் சங்கங்களும், கழகங்களும் இந்தத் திட்டத்திற்கு திட்டவட்டமாக எதிர்ப்புக் கருத்துக்கள் வெளியிட்டுவிட்டன. பொது மக்களும் தெரிவித்துவிட்டனர். தங்களுடைய ஆட்சேபணையை பத்திரிகைகளும் கண்டித்து தலையங்கங்கள் தீட்டிவிட்டன. கட்சி சார்பு பத்திரிகைகளும் கூட முழுக்க முழுக்க ஆதரவு தந்து ஆசீர்வதிக்க முடியவில்லை இத்திட்டத்தை. பரிசீலனைக் குழுவான அந்த பருலேகர் கமிட்டியும் தட்டுத் தடுமாறி ஏதோ சப்பைக்கட்டு ஆதரவுதான் காட்டியிருக்கிறது.

இந்தக் கல்விப் பிரச்னை விஷயமாக சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் தொகுதிகளில் முகம் காட்டவும் துணிவு கொள்ள முடியாத சங்கடம் ஏற்பட்டுள்ளது. ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் இன்னும் சொல்லப்போனால் ஒரு முன்னைய முதலமைச்சருங்கூட பொதுமக்களின் கருத்தை, உள்ளக் குமுறலை எடுத்துக் காட்டி எச்சரித்

துள்ளனர் சர்க்காரை. இவர்களுடைய நல்லெண்ணத்தில் எவ்வகையிலும் சந்தேகிப்பதற்கில்லையே. இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளாரே அவர் இந்தப் பிரச்னையை வாக்காளர்களின் தீர்ப்புக்கு விட்டு சோதனை செய்யவும் சித்தமாக இல்லை. அவருக்கென்ன கவலை வாக்காளர்களைப்பற்றி? கொல்லை வழியிலே நியமனம் மூலம் எட்டிக் குதித்து அமர்ந்துகொண்டிருக்கிறாரே சட்டசபை ஆசனத்தில், இந்த விஷயத்திலே கெடுபிடி செய்தால் எங்கே சட்டசபை கலைக்கப்பட்டுவிடுகிறதோ, கலைக்கப்படும்படி செய்யப்பட்டுவிடுகிறதோ என்ற திகில். சட்டசபை அங்கத்தினர்களும் இத்திட்டம் பற்றி பொதுமக்களின் கருத்தை அறிய தகுந்த நடவடிக்கையைத் துணிந்து எடுத்துக்கொள்ள வியலாது தடைகட்டி நிற்பதாகத் தோன்றுகிறது. இந்த எதிர்ப்புகளையெல்லாம், அதிருப்திகளையெல்லாம், ஒரு அரசியலின், கும்பலின் எதிர்ப்பு என்றோ அல்லது ஆதாரவற்ற அதிகாரமற்ற ஒரு மைனாரிட்டி கும்பலின் எதிர்ப்பு என்றோ எண்ணமிட்டு இவற்றைத் தட்டிக் கழித்தால் அப்போது ஜனநாயகம் என்பதே அர்த்தமற்றதாகவும் மதிப்பற்றதாகவும் ஆகிவிடும்; மக்களின் குரல் கடவுளின் குரல் எனப்படுவதற்கில்லை. சர்வாதிகாரம் தனது கோரக் கொடுந்தலையை நிமிர்த்தி கூத்தடிக்கத் தொடங்குவதாகும்.

## வார்தா கல்வித்திட்டத்துக்கும் மாறுபட்டது

இந்தப் புதிய கல்வித் திட்டமானது வார்தா நிபுணர்கள் தொகுத்த அந்த அடிப்படைக் கல்வித் திட்டத்துக்கும் மாறுபட்டதாகும். இது ஒன்றே, தெள்ளத் தெளிய சுட்டிக் காட்டுகிறது இப்போதைய முதலமைச்சர் அந்த வார்தா அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அடிப்படைக் கொள்கைகளை ஆதரிக்கவில்லை என்று. 1937–ம் ஆண்டு வாக்கிலே அடிப்படைக் கல்வித் திட்டம் உருவம் பெற்றது. அப்போது, தேசிய உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்தது; பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிர்ப்பும் ஏறக்குறைய உச்ச நிலைமையிலிருந்தது. போட்டி சர்க்கார் ஏற்படுத்தும் எண்ணமும் தோற்றுவிக்கப்பட்டது.

தமது வாழ்க்கைத் தத்துவத்தை—தமது ஆட்சித் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டும், கிராமாந்திர சுயதேவைப் பூர்த்திக் கோட்பாட்டின்மீதும், காந்தியார் "பள்ளிக்கூட வயதடைந்த எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி முறை விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தமது கடமையை உணரவில்லை. எனவே இந்த கட்டாய ஆரம்பக் கல்விப் பிரச்னையைத் தீர்த்து வைக்க ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டும்" என்று விரும்பினார். தம்முடைய இந்த திட்டத்துக்கு ஆசாங்கத்தார்

ஆதரவு கிடைக்காதென்றும் அவர் உணர்ந்தார். எனவே, காந்தியார் இத்திட்டம் தன்னைத் தானே ஆதரித்துக்கொள்ள வேண்டிய அம்சத்தை வற்புறுத்த வேண்டியவரானார்.

எனவே, அவர், ஆரம்பப் பள்ளிக்கூடத்தை ஒரு குடிசைத் தொழிற்சாலையாக்க வேண்டியதாயிற்று. அதாவது அப்பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்கள் பிழைப்புக்கு மாணவர்களால் கிடைக்கும் வருமானத்தை நேரடியாக நம்பியிருக்கவேண்டும்.

இந்த திட்டத்திலும் பிற்காலத்திலே பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுங்கூட இது கடுமையான கண்டனத்துக்கும் குறை கூறலுக்கும் இலக்காயிற்று என்பதோடு, இந்தத் திட்டம் எந்த சந்தர்ப்ப நிலவரத்திலே சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த நிலவரம் இப்போது இல்லை என்ற உண்மையையும் எடுத்துக் காட்டப்பட்டது. இப்போது நமக்கு நமது சொந்த சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. எனவே இப்போது நல்வாழ்வு நாட்டுக் குடிமக்களுக்குரிய முதன்மையான கடமையை முன்னை விட அதிக அக்கரையுடன் பொறுப்புடன் செய்ய வேண்டும்.

## எது கல்வி?

கல்வி என்றால் புது விஷயங்களைக் கற்றுக்கொள்ளுதல் என்பதாகும். தெரிந்ததில் பயிற்சி செய்வதல்ல. பள்ளிக்கூடத்தில் மாணக்கர்கள் ஒவ்வொரு நாளும் ஏதாவது புதுப் புது விஷயங்களைக் கற்றுக்கொள்கின்றனர். ஓராண்டிலே ஒவ்வொரு நாளும், மும்மூன்று மணி நேரம் ஒரே கைத்தொழிலைக் கற்றுக்கொள்ளச் செய்தால் அது கல்வியேயல்ல. புதிய கல்வித் திட்டத்தின்படி. படிப்புடன் ஒரு தொழில் அல்லது கைத்தொழில் வேலை செய்யச் செய்வது கல்வி இயலின்படி தகுதியானதல்ல. இது தவறானதென்றே கூற வேண்டும்.

மான்ட்போர்டு சீர்திருத்தம் வந்தது முதலே ஆரம்பக் கல்வி முறையில், தொழில் வகைத் தொடர்பும் இருக்க வேண்டுமென்று எண்ணப்பட்டது. இவ்வகையிலே திரு. பாத்ரோ முயற்சி எடுத்துக் கொண்டார். ஸ்டாத்தம் திட்டம், சாம்பியன் திட்டம்,-பின்னர் மத்திய சர்க்கார் வகையில் தொகுக்கப்பட்ட மற்றொரு ஸ்டாத்தாம் திட்டம், ஆகியவை நமது சொந்த ராஜ்யத்திலே-சென்னை ராஜ்யத்திலே நடத்திப் பார்க்கப்பட்டன. பொது மக்களின் ஆதரவை-ஆர்வத்தை அடையமுடியாது இவைகள் அனைத்தும் படுதோல்வி கண்டன.

இப்போதைய நிலவரத்திலே ஆரம்பக்கல்வி முறையிலே தொழில் அம்சத்தை நுழைப்பதற்கு பொதுமக்களின் இணக்கத்தை ஒருக்காலும் அடைய முடியாது.

## கேடு விளைவிப்பது

குழந்தைகளின் பூப்பிஞ்சு பருவத்திலே-குழந்தைகளின் விருப்பத்தை, சுபாவத்தை, தகுதியை, திறமையை, போக்கை தெளிவுற நிர்ணயிக்கவிடலாகாத பருவத்துக்குமுன்பே தொழில் கல்வி அளிப்பது பயனளிக்காது. இம்மாதிரியான படிப்பு முறை ஒரு குழந்தையின் சிறப்பையும், ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அக்குழந்தையின் சாதாரண இயற்கை வளர்ச்சியையும் பாதித்துத்தான் தீரும்.—"ஆத்மார்த்தத் துறை" யிலும் கேடு விளைவிப்பதாகும்.

மேலும் இந்தப் புதியதிட்டமானது, தனக்குள்தானே அடக்கமாகவுள்ளது. நடப்பிலேயுள்ள படிப்பு முறைக்கு ஒத்துவரவில்லை. சின்னஞ்சிறு பருவத்திலே கைத்தொழில் பயிற்சியை, அல்லது, வேறுதொழில்களைக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்துவதும், அதே சமயத்தில் கல்லூரிப்படிப்புக்கு அல்லது அறிவுப் பயிற்சிக்கு தொழில் கல்விக்கு அளிக்கப்படும் அளவு நேரம் அல்லது குறைந்த நேரம் அளிப்பது, உயர்தரக் கலாசாலைப் படிப்பு முன்னேற்றத்துக்குக் கட்டாயம் கேடு விளைத்துத்தான் தீரும் என்பது உறுதியிலும் உறுதி.

## விசித்திரமான காரணம்

இந்தப் புதிய திட்டம் நுழைக்கப்படுவதற்கு விசித்திரமான காரணம் கூறப்படுகிறது. அதாவது சர்க்காரின் இப்போதைய பண நிலவரத்திலே கட்டாய இலவச ஆரம்பக் கல்விமுறையைக் கொள்ளுவது சாத்தியமில்லையாம்; எனவேதான் குழந்தைகளுக்கு, அதிலே கொஞ்சமாக மாற்றி மாற்றி, அவையவைக் கவளம் அளிக்கப்படுகிறதாம். விந்தையான கூற்று; வியப்பான வாதம்!

நாகரிகமுற்ற ஒவ்வொருநாடும் மேற்கத்தி நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது நாட்டுக் குழந்தைகளுக்கு, ஒரு குறிப்பிட்ட வயதுவரை கட்டாய இலவசக் கல்வி அளிப்பதிலே வெற்றி கண்டிருக்கின்றன.

தொலைவுக்குப் போவானேன் பாருங்கள் நமது அண்டைத் தீவான இலங்கையை; பல்கலைக் கழகப் படிப்பு உட்பட எல்லாப் படிவப் படிப்பும் அங்கு இலவசமாக அளிக்கப்படுகிறதே.

நமது அரசியல் சட்டமும் இத்துறையில் உத்தரவாதமளிக்கிறது; அதாவது இந்த அரசியல் திட்டம் அமுலுக்குவந்த பத்தாண்டுகளுக்குள் குழந்தைகளுக்குப் பதினாறு வயதுவரை கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்று விதி செய்திருக்கிறது.

நாட்டுக் குடிமக்கள் படிப்பறிவற்றவர்களாய் இருந்தால் எந்த ஜனநாயக முறையும் நடைபெறாது-அது உயிர்பற்றி நீடித்திருக்கவும் முடியாது-நமது அரசியல் சட்டத்திலே அளிக்கப்பட்

றுள்ள உத்தரவாதத்தை நடத்தி வைக்காவிட்டால், இது விருப்ப மில்லை என்பது அல்லவாயினும் மகத்தான முக்கியப் பிரச்சினை களை சமாளிக்க தகுதியும் திறமை யுமில்லை என்பதுதான் வெட்ட வெளிச்சமாகும்.

எழுத்தறிவற்ற ஊமைகளான கோடிக்கணக்கான மக்களுக்கு சின்னங்களையும் சமிக்கைகளையும் காட்டி, அவர்களிடம் வோட்டு களைப்பெறமுற்படுவது மிக மிக மானக்கேடாகும்.

## ஜீவாதாரக் கடமை

இந்த முக்கிய பிரச்சினைக்கு முதன்மை தந்து கவனிக்க வேண்டிய ஜீவாதாரக் கடமை ஆட்சியாளர்மீது சுமத்தப்பட் டுள்ளது. இதற்குஎவ்வளவு செல வானாலும் சரியே; அப்பணத் துக்கு எப்படியாயினும் வழி செய்துதான் தீரவேண்டும்.

சுமார் ஒரு டஜன் தேசிய ஆராய்ச்சிசாலைகள் ஏற்படுத்த சுமார் ஆறு கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கிறதென்றால் — நீர்ப்பாசன திட்டங்கள் அல்லது மின்சாரத்தேக்கங்களுக்குஏராள மான பணம் கிடைக்கிறதென்றால் — ஐந்தாண்டு திட்டத்திலே குறிப்பிட்டுள்ள மற்ற தேசிய திட்டங்களுக்கு பணம் கிடைக் கிறதென்றால் — தேவையற்ற அளவுக்கு ஏராளமான அதிகப் படியான ரயில்வே சாமான்களை வாங்கிக் குவித்து வைக்கப்பணம் இருக்கிறதென்றால் — உலகெங் கும் தூதரகங்கள் ஏற்படுத்த பணம் இருக்கிறதென்றால்-இவை எல்லாவற்றையும் விட அதிக முக்கியமானதும் முதன்மைக் கவனிப்புக்குரிய கடமையுமான கட்டாய இலவசக்கல்வி ஏற்பாடு செய்வது ஒருக்காலும் அசாத்தி யமாக இருக்கமுடியாது. ஜன நாயக ஆட்சி வெற்றிகரமாக நடப்பதற்கு முதன்மையான முக்கிய நிபந்தனை இதுவாகும் —அரசியல் சட்டமும் மக்களுக்கு உத்தரவாதமளிக்கிறது. நாட்டின் நிலைமையும் எந்தவகையிலாவது இந்த உத்தரவாதத்தை நிறை வேற்றிவைக்வேண்டிய நிலவரத் திலுள்ளது. இது செய்யப்பட வேண்டும் -செய்தாகவேண்டும்"-- ஆனால் அரை குறையாக அல்ல.

## ஷிஃப்ட்முறை

இளஞ்சிறுவர்களுக்குஷிஃப்ட் முறையைவைத்து அன்றாடம் அரை நாளை படிப்பறிவற்ற பாமர கைத்தொழில் காரர்களிடையே- திறமையிலும் ஒழுக்கத்திலும் நடவடிக்கைகளிலும் குணபாவத் திலும் சந்தேகத்திற்கிடமான நபர்களிடையே கழிக்கவிடுவது அக் குழந்தைகளின் நல்லொழுக்கத்தைப் பாதிக் கும். குழந்தைகளுக்குப் படிப்பு விஷயத்தில் அக்கறையும் பற்றுதலும் கவனமும் ஏற்படா மல் போகலாம்.

'விளையாட்டுடன் கற்றுக் கொள்'' ளும் தற்காலப் படிப்பு முறை — வீட்டிலே எவ்விதமுயற் சியும் எடுத்துக்கொள்ளப்படாத

தால் இப்போதே தனது பல வீனத்தைக் காட்டி வருகிறது, பள்ளி மாணவர்கள் தங்கள் கருத்தை ஒரு நிலைப்படுத்தி, கவனித்துப் படிக்காததாலும், தேவையான அளவு முயற்சி எடுத்துக் கொள்ளாததாலும் படிப்பின் தரம்குறைந்து போய் விட்டது. எளிதில் தேர்வு பெறவும் மாணவர்கள் கூக்குரலிடுகின்றனர்.

எனவே கட்டாய இலவச கல்வியளிக்கும் பிரச்சனையை உடனடியாகக் கைக் கொள்ளட்டும். ஆனால் அரைகுறை முறைகளிலோ, பரம்பரை குலமுறைத் தொழில்களை மக்கள் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கும் முறைகளிலோ அல்ல. பரம்பரைக்குலத்தொழில் முறை இப்போது சிதைந்து விட்டது.

## திரைமறைவு முயற்சி

மக்களுடைய முன்னேற்றத்துக்குப் பெருங்கேடு விளைப்பதான இந்தப் பழைய முறையை மீண்டும் உயிர்ப்பிக்க ஏதாவது திரை மறைவு முயற்சி செய்யப்படுமானால் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் ஏற்பட்டுள்ள இப்போதைய இந்தியாவில் அம்முயற்சி ஒருக்காலும் வெற்றியடையவே அடையாது.

ஜனநாயக ஆட்சி முறையானது, ஒரு செருப்புத் தொழிலாளியின் மகன் சிறப்புக்குரிய ஒரு பிரதமர் பதவி அடைய வாய்ப்பளிக்காவிட்டால் — ஒரு பத்திரிகை விற்கும் சிறுவன் ஒரு சட்ட நிபுணனாக வாய்ப்பளிக்காவிட்டால் ஒரு மாபெரும் கண்டத்தின் வைசிராயாக வாய்ப்பளிக்காவிட்டால்—ஒரு கப்பல் மாலுமி பொக்கிஷ மந்திரியாக வாய்ப்பளிக்காவிட்டால்-ஒரு சிப்பாயாக இருந்தவர் இக்காலப் பிரதம மந்திரிகளில் தலை சிறந்தவராக வாய்ப்பளிக்காவிட்டால்- அந்த ஜனநாயக முறை வெற்றியடையாது; அதுதன் நோக்கத்தையும் அடையாது.

## ஜனநாயக ஆட்சியின் அடிப்படை

பழைய முறைக்குத் திரும்பிச் செல்வதென்ற பேச்சேயில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பளிக்கப்படவேண்டும் என்பதே ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படை. மக்களைப் பரம்பரைக்குலத் தொழிலிலே இருக்கச்செய்யும் எந்த முயற்சியும், இந்த நாளில் வெற்றிபெறாது. அவசியமானால் இழந்த வருமானத்தை மீண்டும் அடைய ஏற்பாடு செய்யட்டும். ஏனென்றால் உலகத்தின் கெட்ட பழக்கங்கள் அடியோடு நீக்கமுடியாது. இந்த வருமானத்தை கட்டாயக் கல்வி ஏற்படுத்துவதற்கு ஒதுக்கி வைக்கட்டும்.

அடிப்படைக் கல்வி முத்திரைதாரிகளான ஹிந்துஸ்தானி தாலிமீ சங்கத்தாரை "காலத்துக்கேலாத வெறியர்கள்' என்று

திரு. ஜே. பி. கிருபளானியும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகவே நாம் நமது சக்தியையும் சாதனங்களையும் வெறிச் செயல்களிலும், அரசியல் வேடங்களின் வலிவைச் சோதிப்பதிலும் விரயமாக்காமலிருப்போமாக. மேற்கிலுள்ள மற்ற நாடுகளுக்குச் சரிசமத்துவமான நிலைமைக்கு நம் நாட்டை உயர்த்தும் உருப்படியான வேலைகளில் நாம் ஈடுபடுவோமாக.

உலக ஞானத்தை அளிப்பதும், பகுத்தறிவு சக்தியை வளர்ப்பதும், மேலும் புதியனவற்றை அறிந்துகொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவதுமான பரந்த முறை ஆரம்பக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட, நல்ல உறுதியான கல்வி முறைதான் இப்போது அவசரமாகத் தேவைப்படுகிறது. நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகமிக ஜீவாதாரமான இந்த விஷயத்தில் அரைகுறை அவசரக்கோல நடவடிக்கைகளும் சமாதான பேரங்களும் வேண்டாம்.

(விடுதலை)

---


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை–1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# "படிப்பின் தரத்தைக் குறைப்பதே ஆச்சாரியாரின் நோக்கம்"

## "பள்ளிக்கூடத்திற்கு பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்பாததேன்"?

### "தினத்தந்தி" ஆசிரியரின் விளக்கவுரை

24—1—54 ஈரோடு "ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்பு மாநாடு" திறப்பு விழாவில் திரு. எஸ். பி. ஆதித்தன் எம். ஏ. பார்-அட்-லா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு:—

பெரியார் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!

இந்த மாநாட்டில் பங்கு எடுத்துக்கொள்ள எனக்கு நீங்கள் கொடுத்த வாய்ப்புக்கு எனது நன்றியைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொண்டு ஆரம்பிக்கிறேன்.

#### புதிய கல்வித் திட்டம்

ராஜகோபாலாச்சாரியின் "புதுக் கல்வித்திட்டம்" என்பது என்ன?

பள்ளிக்கூடங்களில் முதல் 5 வகுப்புக்களில், 5 மணி நேர படிப்பு வேண்டாம்; 3 மணி நேர படிப்பு போதும். பிள்ளைகள், இரண்டு வேளை பள்ளிக்கூடங்களுக்குப் போக வேண்டாம்; ஒரு வேளை போனால் போதும். இதுதான் ராஜகோபாலாசாரியின் "புதிய கல்வித் திட்டம்."

"இது கல்வித் திட்டம் இல்லையே, இது கல்வி—இல்லாமைக்குத் திட்டமாக இருக்கிறதே" என்று ராஜகோபாலாச்சாரியாரிடம் சொன்னால், அதற்கு அவர் பதில் சொல்லுவது இன்னும் விபரீதமாக இருக்கிறது.

"ஒரு வேளை பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டு, பாக்கி நேரத்தில் குழந்தைகள் அவரவர்கள் பெற்றோர்களின் வேலையைச் செய்யட்டும்" என்கிறார்.

இது எப்படி முடியும்? மண் வெட்டுகிறவனுடைய குழந்தை மண் வெட்ட வேண்டுமா? கல் உடைக்கிறவனுடைய சின்னஞ் சிறு குழந்தை கல் உடைக்க வேண்டுமா? தெரு கூட்டுகிறவனுடைய குழந்தை சிறு வயதிலேயே தெரு கூட்ட வேண்டுமா?

இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டால், அதற்கு திரு. ராஜகோபாலாச்சாரியார் கூறுகிறார், "எல்லோரும் தச்சு வேலை செய்ய கற்றுக் கொள்ளலாமே. நான் கூட தச்சு வேலை செய்திருக்கிறேன். நான் எத்தனையோ பேர்களுக்கு க்ஷவரம் செய்

திருக்கிறேன். செருப்புத் தைக்கவும் நான் பழகியிருக்கிறேன்,' என்று இவ்வாறு கேலிக்கூத்தாக பதில் சொல்கிறார்.

சரி எல்லோரும் தச்சு வேலை, க்ஷவரத் தொழில், செருப்புத் தைக்கும் வேலை இவைகளைக் கற்றுக் கொண்டால் அதனால் பயன் உண்டாகுமா? இந்த வேலையைச் செய்யும் தொழிலாளர்கள் போதிய வேலை கிடைக்காமல் திண்டாடும்போது இன்னும் அதிகம் பேர் அதே வேலையைக் கற்றுக் கொண்டால் அவர்கள் என்ன ஆவது?

இப்படிக் கேட்டால் ராஜகோபாலாச்சாரி "ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லையென்றாலும் பரவாயில்லை. பள்ளிக்கூடத்திற்கு மட்டும் போகாமல் இருந்தால் போதும். பள்ளிக்கூடமே ஒரு சிறைச்சாலை" என்று பதில் சொல்கிறார்.

இதையெல்லாம் பார்த்தால் படிப்பின் தரத்தைக் குறைத்து விடவேண்டுமென்ற ஒரே நோக்கம் திரு. ராஜகோபாலாச்சாரிக்கு இருப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது. படிப்பின் தரத்தைக் குறைத்தால் நாட்டின் தரத்தை உயர்த்த முடியுமா?

## ஆதரிப்பவர் உண்டா?

இந்தக் கல்வித் திட்டத்தை யாராவது ஆதரிக்கிறார்களா? யாரையாவது கலந்து ஆலோசித்து இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதா? கிடையாது.

இத்திட்டம் திரு. ராஜகோபாலாச்சாரியின் அந்தராத்மாவில் உதித்தது. இந்தத் திட்டத்தை திராவிட கழகம் எதிர்க்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கிறது. பிரஜா—சோஷலிஸ்டு கட்சி எதிர்க்கிறது. உழைப்பாளிக்கட்சிஎதிர்க்கிறது. காங்கிரஸ் கட்சியிலுள்ள யோக்கியர்கள்கூட இதை எதிர்க்கிறார்கள்.

பழைய முதல் மந்திரியும் பழுத்த காங்கிரஸ் வாதியுமான ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இதைப் பற்றி 30-12-53 ல் பேசியபோது "ராஜாஜி அவர்களே! பிடிவாதத்தைக் கைவிடுங்கள். மக்கள் விரும்பாத கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து ஏன் தொந்தரவுகளை விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறீர்கள்?" என்று எச்சரித்தார்.

## டாக்டர் நாயுடு

டாக்டர் வரதராஜலு நாயுடு இன்னும் சற்று தீவிரமாகப் பேசினார். "கல்வித் திட்டத்தைக் கைவிடுங்கள்; இல்லையேல் முதல் மந்திரி பதவியைக் கைவிடுங்கள்" என்று அவர் ராஜகோபாலாச்சாரிக்குவிடுத்தசவால் காங்கிரஸ்காரர்களைக்கூட தட்டி எழுப்புவது போல் இருந்தது. ஆனால் திரு. ஆச்சாரி அசைந்து கொடுக்கவில்லை. "இவன் சொல்லி நான் கேட்பதா என்று என் மனக்குரங்கு சொல்கிறது" என்று சொன்ன பதிலை டாக்டர் நாயுடு

சகித்துக் கொள்ள நேரிட்டது. டாக்டர் நாயுடுவை முட்டாள் தனத்தின் நடுநாயகம் என்றும் ராஜகோபாலாச்சாரி வருணித்தார். இதை தொடர்ந்து திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தலைவர் திரு கே. டி. கோசல்ராம் சட்டசபையில் ஆவேசமாகப்பேசினர். "ராஜகோபாலாச்சாரி பேயாட்சி நடத்துகிறார், பேயாட்டம் ஆடுகிறார்" என்று சொன்னதும் அல்லாமல், "இந்தக் கல்வித் திட்டத்தை வைத்து ராஜகோபாலாச்சாரி ஒரு தேர்தலில் நிற்கட்டும். அவரை எதிர்த்து ஒரு குருவிக் குஞ்சு நின்றாலும் அவர் தோல்வியடைவது நிச்சயம்" என்றார். இதையும் திரு. ராஜகோபாலாச்சாரி சட்டை செய்யவில்லை. வாதத்திற்கு மருந்து உண்டு. பிடிவாதத்திற்கு மருந்து கிடையாது.

## புள்ளி விவரம்

சென்னை ராஜ்யத்தில் ஜனத்தொகை எவ்வளவு? பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை என்ன? [ஆந்திரா பிரியுமுன்னால் எடுத்த கணக்கில் 62 சதவிகிதம்] புள்ளி விவரங்கள் பின்வருமாறு:—

| | 1941 | 1951 |
|---|---|---|
| **ஜனத்தொகை** | | |
| ஆண் | 1,53,00,000 | 1,76,00,000 |
| பெண் | 1,55,00,000 | 1,77,00,000 |
| மொத்தம் | 3,08,00,000 | 3,53,00,000 |
| **சிறுவர்கள் வயது 6–12 வரை** | | |
| ஆண் | 23,00,000 | 26,00,000 |
| பெண் | 23,00,000 | 26,00,000 |
| மொத்தம் | 46,00,000 | 52,00,000 |
| **1–5 வகுப்பு பள்ளிக்கூடம் செல்பவர்கள்** | | |
| ஆண் | 9,00,000 | 13,00,000 |
| பெண் | 5,00,000 | 8,00,000 |
| மொத்தம் | 14,00,000 | 21,00,000 |
| **100–க்கு எத்தனை பேர் பள்ளிக்கூடம் போகிறார்கள்** | | |
| ஆண் | 42.1 | 49.5 |
| பெண் | 22.2 | 29.0 |
| மொத்தம் | 32.2 | 39.2 |

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து தமிழ் நாட்டில் உள்ள ஆண் குழந்தைகள் பாதிப் பேர் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறார்கள் என்பதும பெண் குழந்தைகளில் 100–க்கு 70 பேர் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறார்கள் என்பதும்

தெரிகிறது. இதைப் பற்றி பாருளேக்கர் கமிட்டி ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதையே திரு. ராஜகோபாலாச்சாரியும் அடிக்கடி எடுத்துக் கூறுவதுண்டு. ஷிப்டு முறையைக் கையாளுவதன் மூலம் இரட்டிப்புப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகக் கூடும் என்று அவர் வாதாடுகிறார். ஆனால் இது அனுபவத்தில் நாம் காணும் உண்மை அல்ல. பெற்றோர்கள் ஏன் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முடியாமல் இருக்கிறார்கள் என்பதை சிந்தனை செய்து பாருங்கள். பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகள் வர முடியாமல் குறுக்கே நிற்பது, படிப்பின் மீது பெற்றோர்களுக்கு உள்ள வெறுப்பு அல்ல; வறுமைதான் காரணம்.

பள்ளிக்கூட நேரத்தைக் குறைப்பதனால் அதிக பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்பது ஏமாற்றத்தில்தான் முடியும். பிள்ளைகளைப் பள்ளிக்கூடம் அனுப்பாத பெற்றோர்களுக்குத் தண்டனை விதிப்பது என்ற முறையை சென்னை அரசாங்கம் கையாண்டு பார்த்து பிறகு கடைசியில் கைவிட நேர்ந்தது.

## சாப்பாடு

1945–47-வது ஆண்டுகளில், சில குறிப்பிட்ட ஊர்களில், ஏழைக் குழந்தைகளுக்கு மத்தியான சாப்பாடு இலவசமாகப் போட்டுப் பார்த்ததில், ஏராளமான பிள்ளைகள் பள்ளிக்கு வர ஆரம்பித்தனர். சோறு போடுவது என்று பரீட்சை செய்து பார்த்த இடங்களில் 82 சதவிகிதம் ஆண் பிள்ளைகள் பள்ளிக்கூடம் வர ஆரம்பித்தார்கள். இதிலிருந்து நாம் சந்தேகம் இல்லாமல் தெரிந்து கொள்வது ஒன்று. அதாவது பள்ளிப் பிள்ளைகளுக்கு மத்தியான உணவு கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்கொண்டால், எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிக்கூடத்துக்குப் போகச் செய்ய முடியும். இதைத் தவிர வேறு வழி கிடையாது. படிப்பு நேரத்தைக் குறைப்பதனால் பயன் இல்லையென்பது சென்னை மாகாணத்திலும் வேறு சில ராஜ்யங்களிலும், அனுபவத்தில் தெரிந்து கொண்ட உண்மை. 1948-ல் சென்னை ராஜ்யத்தில் "ஷிஃப்ட் முறை" சில பள்ளிக் கூடங்களில் பரிட்சார்த்தமாக ஆரம்பித்துப் பார்த்ததில், வெற்றி கிடைக்கவில்லை. திருவாங்கூர்–கொச்சி ராஜ்யத்திலும் ஷிப்ட் முறை வெற்றி பெறவில்லை. வேறு சில வெளி நாடுகளில் குறிப்பாக ஃபிலிப்பைன் தேசத்தில் இந்த முறை 12 வருடகாலம் பார்த்து பின் கைவிடப்பட்டதாக பாருளேக்கர் கமிட்டி அறிக்கை கூறுகிறது.

## ஜனநாயகம்

சென்னை சட்ட சபையில் 29–7–53–ல் இந்தக் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று தீர்மானம்

வந்த போது தீர்மானத்துக்கு ஆதரவாக 139 பேர்களும் திரு. ராஜகோபாலாச்சாரிக்கு ஆதரவாக 137 பேர்களும் வோட்டு செய்தார்கள். ஆகவே ராஜகோபாலாச்சாரியின் உயிர் நாடி போன்ற கல்வித்திட்டம் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று சட்டசபை கட்டளை இட்டது. வேறு ஒரு முதல் மந்திரியாக இருந்தால் உடனே பதவியை ராஜிநாமா செய்து இருப்பார். அதுதான் நேர்மை; அதுதான் மரியாதை; அதுதான் ஜனநாயகம். ஆனால் கவர்னரின் தயவினால் நியமனம் என்ற புழக்கடை வழியாக சட்டசபைக்கு வந்த திரு. ராஜகோபாலாச்சாரிக்கு ஜனநாயகம் ஏது ?

சட்டசபை தீர்மானத்தைப் புறக்கணித்ததும் அல்லாமல், 'இந்தத் தீர்மானம் வெறும் சிபாரிசு' என்று சொல்லி, சட்டசபைக்கு இழிவையும் உண்டாக்கினார். சட்ட சபையின் தீர்ப்புக்குத் தலை வணங்காது அரசாங்கம் நடக்குமானால் ஏன் ஒரு சட்டசபை வேண்டும்? அதற்கு ஏன் பொதுப்பணம் செலவாக வேண்டும் ?

காங்கேயம் உபதேர்தலின் போது, 'இந்தப் புதிய கல்வித் திட்டம் வேண்டுமா, வேண்டாமா' என்ற விவகாரத்தின் மீது பொது மக்கள் வோட்டுப் போட்டார்கள். ராஜகோபாலாச்சாரியின் கல்வித் திட்டத்தை ஆதரித்தவர்கள் மாட்டுப் பெட்டிக்கு வோட்டுப் போட்டார்கள் ஆனால் காங்கிரஸ் தோல்வியுற்றது. பெருவாரியான பொதுமக்கள் இந்தக்கல்வித்திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பது பகிரங்கமாக நிரூபிக்கப்பட்டு விட்டது.

ஆனால் மக்களின் தீர்ப்புக்கு ராஜகோபாலாச்சாரி பணிய மறுத்தார். மக்களின் கருத்தைப் பற்றி அவருக்குக் கவலை கிடையாது. "எதிர்ப்புக்கு நான் பயந்தவன் இல்லை. வருங்காலத்தில் என் கதி என்ன என்பது பற்றியும் எனக்குக் கவலை இல்லை" என்று 15—12—53-ல் சட்டசபையில் கூறினார்.

## சமாதானங்கள்

ராஜகோபாலாச்சாரி சொல்லும் சில "சமாதானங்கள்" வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருக்கின்றன. "அதிகமாகப் படித்தால் மறந்து விடுவார்கள். ஆகையால் அதிகமாகப் படிக்கக் கூடாது" என்று 26–12–53 ல் சொன்னார். அதன்படி பார்த்தால் குறைவாகப் படிப்பது நல்லது என்றும், படிக்காமலே இருந்தால் அதைவிட நல்லது என்றும் ஏற்படுகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த நமது கவர்னர் ஒரு சிறுவனிடம் "5 மணி நேரம் படிக்க விரும்புகிறாயா? அல்லது 3 மணி நேரம் படிக்க விரும்புகிறாயா?" என்று கேட்டாராம். அந்தப் பையன் "3 மணி நேரம்" என்று சொன்னானாம். இதனால் 3 மணி நேரப் படிப்பு நல்லது என்று தெரிகிறதாம்! எப்படி கதை!

நல்ல வேளையாக அதே பையனிடம் "3 மணி நேரம் படிக்க விரும்புகிறாயா? அல்லது பள்ளிக்கூடமே போகாமல் இருப்பதை விரும்புகிறாயா?" என்று கேட்கவில்லை. கேட்டிருந்தால், அவன், "பள்ளிக்குப் போகாமல் இருப்பதையே விரும்புகிறேன்" என்று சொல்லியிருப்பான். இதனால் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றையுமே ஒழித்து விடுவது நல்லது என்று ஏற்படும். அப்படிச் செய்தாலுங்கூட குழந்தைகளுக்குக் கொண்டாட்டம் தான். ஆனால் பெற்றோர்கள் பாடுதான் திண்டாட்டம் ஆகிவிடும்.

## பார்த்தாகிவிட்டது

இந்தப் புதியக் கல்வித் திட்டத்தை 7 மாத காலம் நடத்திப் பார்த்தாகிவிட்டது. அநேக ஊர்களில் பணக்காரர்கள் சொந்த செலவில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவர்களுடைய பிள்ளைகளை காலையில் அரசாங்கப் பள்ளிக்கூடத்துக்கும், மாலையில் சொந்தப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பிப்படிக்க வைக்கிறார்கள். ஆகையால் பணக்காரர்களுக்கு இந்தப் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிய கவலையில்லை. ஆனால் சாதாரண தமிழ் மக்களின் பிள்ளைகள் என்ன ஆவது? குழந்தைகள் அல்லவா நாட்டின் கண்மணிகள்? வருங்காலத்துத் தலைவர்கள்? மூன்றாம் தர படிப்பை குழந்தைகளுக்குக் கொடுத்தால் முதல்தரமான நாட்டை உண்டாக்க முடியுமா?

மூன்று மணி நேரம் பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள் மற்ற நேரத்தில்தொழில்படிக்கிறார்கள் என்பது ராஜகோபாலாச்சாரியின் கற்பனை. ஆனால் உண்மையில் நடப்பது அப்படியல்ல. குழந்தைகளைக் குரங்காக்கும் திட்டம் என்று புதுக் கல்வித் திட்டத்தைப் பற்றி கார்ட்டூன் படம் போட்டு "ஹிந்து" பத்திரிகை விளக்கியிருக்கிறது.

## வேண்டாம்

ஆகவே நாம் ராஜகோபாலாச்சாரியிடம் இது நாள் வரை சொன்னோம்; சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

"போதும் பிடிவாதத்தைக் கைவிடுங்கள். உங்கள் மனக் குரங்கைக் கூண்டுக்குள் அடையுங்கள் பொதுமக்களின் குரலுக்குச் செவி சாயுங்கள்."

ஆனால் அவருடைய எதேச்சாதிகாரப் போக்கு 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக' வளர்ந்துகொண்டு வருகிறது.

அவருடைய கண்ணுக்குத் தென்படுகிற நம் எல்லோரையும் 'எதிரிகள்' என்று வருணிக்கிறார். அவருடைய எண்ணத்தில் நாம் எல்லோரும் எறும்புகள், கொசுக்கள், மூட்டைப் பூச்சிகள். ஆகையால் நாமும் 'மனிதர்கள்' என்பதைக் காண்பிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

**(விடுதலை)**

# உண்மையை மறைக்கிறார் இராமச்சந்திரன்

மத்திய கல்வி ஆலோசக போர்டுக் கூட்டம் டில்லியில் இம்மாதம் 8-ம் தேதி அன்று கூடியிருக்கிறது. இக்கூட்டத்துக்கு சென்னையிலிருந்து கல்வி மந்திரி சி. சுப்ரமண்யமும், அலவன்ஸைத் தவிர சம்பளம் பெறாத ஆலோசகர் ஸ்ரீ. ஜி. ராமச்சந்திரனும், கல்வி இலாகா டைரக்டரும் சென்றிருக்கிறார்கள். இந்த போர்டு கல்வித் திட்டத்தை பரிசீலனை செய்திருக்கிறது. செய்த பின்னர் கீழ்க்கண்ட சிபார்சுகளை கூறியிருக்கிறது.

"அதாவது தேசமெங்கும் கட்டாயக் கல்வி கொண்டு வரும் வரை இதுமாதிரியான புதுத் திட்டங்களை தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரலாம்.

இத் திட்டப்படி 3 மணி நேரப் படிப்பு என்றிருக்கிறது. இது பிள்ளைகளின் படிப்பை ரொம்பப் பாதிக்குமெனக் கூற முடியாது. எனினும் 3 மணி நேரத்துக்குப் பின்னால் பிள்ளைகள் கவனிப்பாரற்று அனுப்பப்படுகிறார்கள். இது கூடாது. இந்நேரத்திலும் அவர்கள் கற்கவேண்டும். ஆகவே கண்காணிப்போடு, அவர்களை அனுப்பவேண்டுமெனக் கூறுகிறோம். இது முக்கியம். பாருலேகர் கமிட்டி சொன்னபடி இதற்கு ஏற்பாடு செய்வது அவசியம்.

அடிப்படைக் கல்விதான் நாட்டுக்கு உகந்தது. அதன்படி ஒரே யிடத்தில் கல்வியும், தொழிற் கல்வியும் கற்பிக்கவேண்டும். இது தான் இருவிதக் கல்வியையும் ஒன்றுபடுத்துவதோடு சமுதாய உணர்வையும் உண்டுபண்ணும். இதற்கு நிதி தேவை. அதுவரை தற்காலிக சீர்திருத்தங்கள் கொண்டுவரலாம். ஆனால் மாணவர்கள்மீது கண்காணிப்பு இருப்பது ரொம்ப முக்கியம்."

நாம் மேலே தந்திருப்பது தான் கல்வி போர்டின் சிபார்சுகள். இந்தச் செய்தியைப் போட்டிருக்கும் "ஹிந்து" பத்திரிகைகீழ் வரும் தலைப்புகள் கொடுத்திருக்கிறது.

**"கல்வி சீர்திருத்தம்**

---

**சென்னை திட்டம் பற்றி அபிப்பிராயங்கள்**

---

**மத்திய போர்டின் யோசனைகள்"**

இவைதான் தலைப்புகள். உள்ளே செய்தியில், சிபார்சுகளுடன் சென்னை திட்டத்தை ஆதரிப்பதாகச் செய்தி இருக்கிறது.

ஆனால் இந்தச் செய்தியை வித்தகரான ஸ்ரீ. ஜி. ராமச்சந்திரன்

என்னமாகத் திரிக்கிறார் பாருங்கள்.

டில்லி தமிழ்ச் சங்கம் அவருக்கும் கல்வி மந்திரிக்கும் ஒரு வரவேற்பு அளித்ததாம். ஜி. ராமச்சந்திரன் இந்த வரவேற்பைப் பெற என்ன சிறப்புகள் பெற்றிருக்கிறாரோ தெரியவில்லை. போகட்டும். அந்த வரவேற்பில் "சென்னை திட்டத்தை போர்டு ஆதரித்து, ஆசீர்வாதத்தோடு மற்ற மாகாணங்களுக்கும் சிபார்சு செய்கிறது — இதை எதிர்ப்போர் வகுப்புவாதிகளும் கம்யூனிஸ்டுகளும்தான்" எனப் பேசியிருக்கிறார்.

இவருக்கு அடுத்தபடியாக பேசியிருக்கும் மந்திரி சுப்ரமண்யம் "ராஜாஜி தொட்ட திட்டமெல்லாம் பொன்—அவர் சென்னை முதன் மந்திரிப் பதவியை விட்டு விடுவாரென்று வருகிற வதந்தியெல்லாம் தவறு—அவர் இருந்தபடியே தொடர்ந்து இருந்து மாகாணத்துக்கும் தேசத்துக்கும் பணி புரிவார்" என முழங்கியிருக்கிறார். இந்த முழக்கத்தைப் பற்றி அபிப்பிராயமும் முடிவும் சொல்லவேண்டியது சென்னை அசெம்பிளி காங்கிரஸ் அங்கத்தினர்கள். அவர்கள் சொல்லுகிற முடிவை ஏற்பதும் ஏற்காததும் ராஜாஜி இஷ்டம். எனவே இதில் சுப்ரமண்யம் குறுக்கிட இடமில்லை. ஆகவே, அதை ராஜாஜிக்கும் சட்டசபை மெம்பர்களுக்கும் விட்டுவிடுகிறோம்.

ஸ்ரீ. ராமச்சந்திரன் சொல்லுவதை மட்டும் பார்க்கலாம்.

மத்திய போர்டு எப்படி சிபார்சு பண்ணுகிறது? பிள்ளைகள் வெளியே போய் திரிவதை, அனுமதிக்காது அவர்களுக்குக் கண்காணிப்பு ஏற்படுத்தினால், திட்டம் சரியாகுமெனக் கூறி சிபார்சு செய்கிறது. இந்த சிபார்சை பாருலேகர் கமிட்டியும் செய்தது. அதை ராஜாஜி அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டாரா?

இல்லவே இல்லை. அவரால் முடியவும் முடியாது. ஏனென்றால் அத்தனை பிள்ளைகளுக்கும் தொழில் கல்வி சொல்லித் தரும் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அதோடு தொழிற் கல்விக்கான கூடங்கள், பட்டறைகள் ஏற்படுத்தவேண்டும் பிறகு சாமான்கள் வாங்கியாக வேண்டும். தொழிலில் நிபுணர்களைக் கொண்டுவந்து போதிக்கவேண்டும். இதற்கெல்லாம் எத்தனை கோடி ரூபாய் ஆகும்? இந்த ரூபாய்க்கு எங்கே போவது? மதுவிலக்கை ரத்து செய்தால் ஒழிய இது நடைபெறாது. மதுவிலக்கை ரத்து செய்ய முடியாது. ஆகவே, சிபார்சுகள் செக்ரட்டரியின் மேஜைகளிலே தூங்கும்! இதுதான் நடக்கிறது. இந்த நடைமுறையை மத்திய போர்டு ஆதரிக்கிறதா என்பதை ஸ்ரீ. ஜி. ராமச்சந்திரன் தைரியமாகச் சொல்லுவாரா? எங்கே பார்க்கலாம்!

திட்டத்தில் இந்தச் சீர்திருத்தம் செய்யாதிருக்கும் வரை என்ன நடக்கிறது தெரியுமா? கோவை ஜில்லாவில், காதாரக் கேட்ட ஒரு சம்பவத்தைக் கூறுகிறோம்.

3 மணி நேரம் படித்துவிட்டு ஒரு மாணவன் வீட்டுக்குப் போய்விட்டான். மறுநாள் திரும்பி வந்தபோது அவனை ஆசிரியர் கீழ்வருமாறு கேட்டார்:

ஆ: நேற்று மத்தியானம் என்ன பண்ணினே?

பை: ஈசல் புடிச்சேன்!

ஆ: ஈசலா? அப்பாவுக்கு என்ன வேலே?

பை: செருப்பு தைக்கிற வேலே.

ஆ: அதைக் கூடயிருந்து பார்க்கக்கூடாது?

பை: ஊஹூம்-ஈசல் தான் புடிச்சேன்...

ஆ: அடப்பாபி இனிமேல் அப்படிச் சொல்லாதே. யாரும் வந்து கேட்டால், அப்பா தொழிலே பார்த்தேன்னு சொல்லணும்.

பை: உஹூம் — பொய் சொன்ன நீங்க திட்டுவீங்களே!

ஆ: பாதகமில்லே—இன்ஸ்பெக்டர் கேட்டால் சொல்லு.

இதுதான் பாக்கி நேரங்களில் நடக்கிறது. வாத்தியார்களே பிள்ளைகளுக்குப் பொய்சொல்லச் சொல்லுகிறார்கள். அனேகநாள் பள்ளிக்கூடத்துக்கு மாணவர்கள் வருவதே கிடையாது. அதற்காகப் பொய்க் கணக்குக் காட்டுகிறார்கள். இதுதான் மகான் ராஜாஜியின் அற்புதமானதிட்டம் வேலே செய்கிற லக்ஷணம்! மாணவர்களே முட்டாளாக்கி, பொய்யர்களாகவும் ஆக்குகிற திட்டம். இதில் ஆசிரியர்களும் கூட்டுக் களவாணித்தனம் செய்யும்படியான கட்டாயம் ஏற்படுகிறது. இல்லேயென்றால் சீட்டுக் கிழிந்துவிடும். பிறகு நெசவாளிகள் போல அவர்களும் குடும்பத்தோடு ஜதா புறப்படவேண்டும்.

மத்திய போர்டு இந்தக் குறைபாடுகளே யெல்லாம் அறிந்துதான் பாருலேகர் கமிட்டியின் சிபார்சைப் பலமாகத் திரும்பவும் சிபார்சு செய்திருக்கிறது. இந்த சிபார்சை காரியத்தில் கொண்டு வந்துவிட்டால், பாதிக் கண்டனம் தானுகவே குறையும். ஆகவே இதைச் செய்யாதபடி கமிட்டி ஆதரிக்கிறது என்று ஜி. ராமச்சந்திரன் சொல்லுகிறுரே என்றால், அது வடிகட்டிய பொய் என்று பொருள்.

இந்தப் புளுகை எப்படி இவ்வளவு தைரியமாகக் கூறுகிறுர் என்று கேட்கலாம். என்ன செய்வது? பணமூட்டைகள் பத்திரிகைகள்தான் நாட்டில் அதிகம். இந்தப் பண மூட்டைகளோ ராஜாஜி

(34–ம் பக்கம் பார்க்க)

# கோணல் திட்டத்தைக் காக்கப் புதிய கட்டளை

## ஆசிரியர்களின் கருத்துக்கு வாய்ப்பூட்டு

சென்னை கல்வி விதிகளுக்குத் திருத்தங்கள் 10–2–54 அன்று கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றின் படி ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியரோ அல்லது வேறு ஆசிரியர் யாரோ தம் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருந்ததாக அல்லது ஏதாவது ஒழுங்கீனம் செய்ததாகக் காணப்பட்டால் கல்வி இலாகா டைரக்டர் உரிய விசாரணை நடத்தி சந்தர்ப்பத்தின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட காலத்துக்கோ அல்லது நிரந்தரமாகவோ ஒருவர் தலைமை ஆசிரியராக அல்லது ஆசிரியராக இருக்க அருகதையற்றவர் என அறிவிக்கலாம்.

விசாரணையின் தன்மை, 154-வது விதியில் சொல்லப்பட்டுள்ளபடி இருக்கும். டைரக்டரின் உத்தரவுகளை ஆட்சேபித்து சர்க்காருக்கு அப்பீல் செய்து கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

விதி 154க்குப் பதிலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள திருத்தம் கூறுவதாவது :—

ஜில்லா கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் அல்லது தலைமை ஆசிரியர்களில் ஒருவரின் நடத்தை அல்லது ஒழுக்கம் மோசமானதென நிரூபிக்கப்பட்டால் அல்லது நாச வேலைகளில் ஈடுபட்டதாக அல்லது பங்கு கொண்டதாக நிரூபிக்கப்பட்டால் அல்லது தம் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது சர்டிபிகேட்டை டிவிஷனல் இன்ஸ்பெக்டர் எந்தச் சமயத்திலும் 'சஸ்பெண்டு' செய்யலாம். கல்லூரி கிரேடு நீங்கலாக வேறெந்த கிரேடையும், சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகள் அவ்வாறு அவரால் சஸ்பெண்டு செய்யப்படலாம்.

பிரஸ்தாப தவறுகளுக்காக எந்த கிரேடையும் சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகளை எந்தச் சமயத்திலும் 'சஸ்

---

(33–ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்கள். ஆகவே என்ன அபத்தம் உளறினும் அவர்கள் விளம்பரமுடைய மடையனைக் கூட மகாபுருஷன் என்று நினைக்கக்கூடிய அளவில், கன்னித் தமிழ்த் தாய் பெற்றெடுத்திருக்கும் தமிழ் மக்கள் இருக்கும் போது என்ன செய்வது.

—பேரிகை.

'பெண்டு' அல்லது கான்சல் (ரத்து) செய்ய டைரக்டருக்கு திருத்தம் அதிகாரம் அளிக்கிறது.

ஒரு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் ஒரு கோர்ட்டில் தண்டிக்கப்பட்டால் ஒழிய அல்லது அவர் மீதுள்ள புகார்கள் பற்றி எழுத்து மூலமாக அவருக்கு அறிவிக்கப்பட்டு டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அல்லது டைரக்டர் அல்லது இவர்கள் நியமிக்கும் ஒரு அதிகாரியால் பூரணமாக விசாரணை நடத்தப்பட்டால் ஒழிய மேற்கண்ட சஸ்பென்ஷன் அல்லது ரத்து உத்தரவிடப்படலாகாது.

## விசாரணை தன்மை

நடத்தப்பட இருக்கும் விசாரணையின் தன்மை வருமாறு :—

சம்பந்தப்பட்ட ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியரின் நடத்தை அல்லது வேலை பற்றி ஜில்லா கல்வி அதிகாரி அல்லது இன்ஸ்பெக்டர்ஸ் டைரக்டருக்கு அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஒரு பூர்வாங்க அறிக்கை அதிகாரி சமர்ப்பிக்கவேண்டும். டைரக்டர் அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டர் உண்மையிலேயே வழக்கு இருக்கிறது என்று கருதினால் மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து இன்ஸ்பெக்டிங் ஆபீஸருக்கு (ஐ. ஓ.) உத்தரவுகள் அனுப்பப்படும். பின் அவர் குற்றப் பத்திரிகை தயாரித்து எழுத்து மூலமாக விளக்கம் கோரி அதைச் சம்பந்தப்பட்ட ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியருக்கு அனுப்பி வைப்பார். விளக்கத்தைப் பெற்று மானேஜரின் குறிப்புக்களுடன் தம் குறிப்புக்களையும் சேர்த்து ஐ. ஓ. டைரக்டருக்கு அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு அனுப்புவார். பின்னர் தண்டனை அளிக்க அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி வழக்கின் தாரதரத்திற்கு ஏற்பத் தக்க உத்தரவுகள் பிறப்பிப்பார்.

பெரும்பாலான வழக்குகளில் நேரடி விசாரணை அவசியமாயிருக்காது. எனினும் விசாரணை அதிகாரிகள் நேரடி விசாரணை அவசியமெனக் கருதினால் அது நடத்தப்படலாம்.

டைரக்டரே முதலில் உத்தரவு பிறப்பித்தால் சர்க்காருக்கும், டிவிஷனல் இனஸ்பெக்டர்கள் உத்தரவு பிறப்பித்தால் டைரக்டருக்கும், அப்பீல் செய்துகொள்ளலாம்.

## ஒப்பந்த அமைப்பு திருத்தம்

10-வது ஷரத்துக்கான 28வது அனுபந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒப்பந்த நகல் அமைப்பும் திருத்தம் செய்யப்படுகிறது. தற்போதுள்ள தற்குப் பதிலாகக் கீழ்க்கண்ட திருத்தம் பிரசுரிக்கப்பட்டுள்ளது :—

இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இருதரப்பாரில் யாரும் ஒப்பந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறினால் பாதிக்கப்

(36—ம் பக்கம் பார்க்க)

# பட்டினிக் கொடுமை! இனி தாள முடியாது!

## இதோ! ராஜினமா!

### 4 மாத சம்பளம் கிடைக்காத வாத்தியார்கள் அவதி

"நாலு மாதம் சம்பளம் கிடைக்கவில்லை. குடும்பத்தோடு பட்டினி கிடக்கிறது. சம்பளம் கிடைக்காத இந்த வேலை எங்களுக்கு வேண்டாம் என்று வாலாஜா தாலுகா சாத்தூர் பஞ்சாயத்து போர்டு பள்ளிக்கூட வாத்தியார்களான சி. சுப்ரமணிய அய்யர் ரத்தின கவுண்டர் ஆகிய இருவர் ராஜினமா செய்து விட்டனர்.

### சம்பளம் கிடைக்கவில்லை

ராஜினமா செய்ததற்கு அவர்கள் கூறிய காரணமாவது:—

4 மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை. இதைப்பற்றி வேலூரில், ஜில்லா பஞ்சாயத்து அதிகாரியைக் கண்டு கூறினேம். அவர் அலட்சியமாக இருந்து விட்டார்.

### பட்டினி கிடந்தோம்

குடும்பத்தோடு பட்டினி கிடக்கிறேம் என்று அந்த அதிகாரியிடம் எடுத்துச் சொன்னேம். இருந்தும் அவர் கவனிக்கவில்லை. வேலை செய்து பட்டினி கிடப்பதை விட சும்மா பட்டினி கிடப்பது மேல் என ராஜினமா செய்து விட்டோம்.

### அரை வயிற்றுக்குப் போதாத சம்பளம்

அவர்கள் மேலும் கூறுவதாவது :—

"எங்களைப் போன்ற வாத்தியார்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமோ மிகவும் குறைவு. சம்பளம் 30 ரூபாயும், பஞ்சப்படி 19 ரூபாயும் ஆக 49 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்தச் சம்பளம் ஒழுங்காக வந்தால் கூட மாதத்துக்கு 10 நாள் பட்டினி கிடக்க வேண்டும். இல்லாவிட்டால் கடன் வாங்க வேண்டும்.

---

35-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் தரப்பார் கல்வி இலாகா டைரக்டர் அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்குமுறையிட்டுக் கொள்ள உரிமையுண்டு. முன்னவர் அல்லது பின்னவர் இவ்விஷயமாகத் தக்க உத்தரவுகள் பிறப்பிப்பவர் எனினும் டைரக்டர் உத்தரவுகளை ஆட்சேபித்து சர்க்காருக்கும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் உத்தரவுகளை ஆட்சேபித்து சர்க்காருக்கும், அப்பீல் செய்து கொள்ள உரிமை உண்டு.

### சாவதா ?

இந்த லட்சணத்தில் 4 மாத சம்பளம் வராமல் இருந்தால் நாங்கள் வாழ்வதா, சாவதா?

எங்கள் நிலைமை மட்டுமல்ல இப்படி. வாலாஜா தாலூகாவிலேயே வாத்தியார்களின் நிலைமை இதுதான்.

### கஷ்டத்தைச் சொன்னால் அரசாங்கம் தண்டிக்குமே !

இந்தக் கஷ்டத்தைஎங்குதான் சொல்வது என்று எங்களுக்குப் புரியவில்லை. கஷ்டத்தை எடுத்துச் சொன்னால் அரசாங்கத்தார் எங்கள் மீது (வாத்தியார்கள் மீது) நடவடிக்கை எடுப்பார்களே என்ற பயம் ஒரு புறம். சொல்லாவிட்டால் வாத்தியார்களே அழிந்து போவார்களே என்ற பயம் மற்றொரு புறம்.

### பசி ! பசி ! எனத் துடிக்கும் குழந்தைகள்

வீட்டுக்குப் போனால் உப்பு இல்லை, புளி இல்லை என்று வாய் விட்டுச் சொல்லி வருந்தும் மனைவி ஒரு புறம். 'பசி, பசி!' என்று துடிக்கும் குழந்தைகள் மற்றொரு புறம்.

இந்த அவதியை எத்தனை நாளைக்குச் சகித்துக்கொண்டிருப்பது என்று ராஜினாமா செய்துவிட்டதாகச் சொன்னார்கள்.

—"தினத்தந்தி"

---

## அறிஞர் வாயுரை

அடடா ! இந்த அதிகாரம் என்பது இருக்கிறதே, இது எவ்வளவு விபரீதமான பொருள் ! இது யாரிடத்தில் இருக்கிறதோ அவர்களுடைய நல்ல பண்புகள் அத்தனையையும் அல்லவா அடியோடு அழித்து விடுகிறது !

—எட்மண்ட்பர்க்

மானிடர் என்னை மதிக்கவில்லை என்பதற்காக நான் மனம் வருந்தவில்லை. அவர்களை நான் அறியவில்லை என்பதற்காகவே வருந்துகிறேன்.

— கன்பூஷியஸ்.

ஏழைமக்கள் வறுமையால் மூடராயிருக்கிறார்கள்; செல்வர்கள் பேராசையால் மூடராயிருக்கிறார்கள்.

— மாக்ஸிம்கார்க்கி.

# செங்கற்பட்டு மாவட்ட ஆரம்ப ஆசிரியர்களின் 9-வது மாநாடு

## புதிய கல்வித் திட்டம் பற்றி நிறைவேற்றிய தீர்மானங்கள்

## 21—2—54

1. தற்போது கிராமப் பகுதிகளில் புகுத்தப்பட்டிருக்கின்ற புதிய முறைக் கல்வித் திட்டம், கீழ்க் குறிப்பிட்ட பலகாரணங்களால் நடைமுறையில் வெற்றிகரமாக ஆசிரியர்கள் அமுல் நடத்த முடியாத காரணத்தால் இத்திட்டத்தை திருத்தி அமைக்கும்படி அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**காரணங்கள் :** 1. பள்ளியின் நேரம் 5 மணியிலிருந்து 3 மணியாகவும், இருவேளைக்குப் பதிலாக ஒரு வேளையும் நடத்தப்படுவதால், பிள்ளைகளின் வருகை எண்ணிக்கை நாளடைவில் குறைந்து கொண்டே வருகிறது.

2. கிராமத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் இரு வேளையும் படிப்பதையே விரும்புகிறார்கள்.

3. ஒரு வேளை படிப்பால் மாணவர்களின் படிப்புத் திறமை மிகவும் குறைகிறது.

4. 5 மணி நேரத்திற்குப் பதில் 6 மணி நேரமும், வாரத்தில் 5 நாட்களுக்குப் பதிலாக 6 நாட்களும் ஓய்வின்றி வேலை செய்வதால் ஆசிரியர்களின் உடல் நலன் மிகவும் பாதிக்கப்பட்டு மனச்சோர்வும் உண்டாகிறது.

5. ஒரே வகுப்புப் பாடத்தை இரு வேளையும் போதிப்பதால் பாடம் கற்பிக்கும் திறமையும் உற்சாகமும் ஆசிரியர்களுக்கு மிக மிகக் குறைகிறது.

6. மாணவர்கள் ஒரு வேளை படித்து மறு வேளையில் பெற்றோர்களின் தொழிலையோ, கிராமக் கைத்தொழிலையோ கவனிக்காது, வீணுகப் போய்ச் சோம்பேறித்தனமாக அலைகிறார்கள். கல்வி இலாகா உத்தரவுப்படி ஒரு வேளை மாணவர்கள் செய்யும் தொழில்களை இருவேளையும் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் எங்ஙனம் கண்காணிக்க முடியும்? அப்படிக் கவனித்தால் வகுப்புகள் பாதிக்கப்படுகின்றன.

7. இத்திட்டத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும் பிரச்சாரம் செய்வதின் காரணமாக

பெற்றோர்களின் மனம் இத்திட்டத்தை எதிர்க்கும் நிலையில் உருவாகி வருகிறது. இந்நிலையில் ஆசிரியர்கள் பெற்றோர்களை அணுகி அரசியலாரின் ஆணைப்படி பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும்படி சொன்னால் பெற்றோர்கள் ஆசிரியர்களை மிகமிகக் கேவலமாக தன்மான உணர்ச்சியை இழக்கும் அளவுக்குத் தூஷிக்கிறார்கள். ஆதலால் கிராமத்தில் ஆசிரியர்களின் மதிப்பும் செல்வாக்கும் குறைவதோடல்லாமல் சில சமயங்களில் ஆசிரியர்கள் அரசியலில் தலையிடவேண்டிய நிலைமையும் உண்டு பண்ணுகிறது.

8. கட்டாயக் கல்வித் திட்டம் அமுலில் உள்ள இடங்களில் அதற்கான அபிவிருத்திக் கமிட்டிகள் அட்டென்டென்ஸ் ஆபீஸர்கள் இருந்தும் பள்ளிக்கூடப் பள்ளி வயதுப் பிள்ளைகள் பள்ளியில் அதிகம் சேர்க்கப்படாத நிலையில், பருலேக்கர் கமிட்டியின் திட்டப்படி வருகிற பள்ளி ஆண்டிலேயே 30 மாணவர்களை 60 ஆக எங்ஙனம் உயர்த்த முடியும்? அது அனுபவ சாத்தியமான காரியம் அல்ல. இத்திட்டப்படி பல ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டியிருக்கும்.

**தீர்மானம் 2 :—** சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள G. O. M. S. 84 எஜுகேஷனல் 30–1–54–ல் M. E. R. 98 (b) 154 திருத்தம் ஆசிரியர்களின் அந்தஸ்தையும், சுயமரியாதையையும் மிகவும் பாதிக்கின்றது. தக்க விசாரணை இல்லாமலேயே எந்த கிரேடு ஆசிரியர்களின் சர்ட்டுபிக்கேட்டுகளையும் எந்த சமயத்திலும் உடனடியாக ரத்துச் செய்யும் அதிகாரம் கல்வி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய உத்தரவு குடியரசு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள பிரஜா உரிமையை மிக மிகப் பாதிக்கின்றது. ஆதலால் இப்புதிய உத்தரவை உடனடியாக எடுத்துவிடும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 3 :—** ஆரம்பப் பள்ளிகளிலுள்ள பாடத் திட்டத்தை மாற்றியமைக்க ஆசிரியர்களின் அபிப்பிராயத்தைக் கொடுக்கும்படி சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கு போதிய காலம் கொடுத்து, உத்தியோகப் பற்றற்ற கல்வி நிபுணர்கள், ஆரம்ப ஆசிரியர்களையும் கொண்ட ஓர் உத்தியோகப்பற்றற்ற குழுவை நிறுவி நிதானமாகப் பரிசீலனை செய்யவேண்டுமாய் அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

# அவர்கள் கேள்வி—நமது விடை

## மாற்றம் அவசியமா?

அரைவேளை பள்ளிக்கூடம்—அரைவேளை கைத்தொழில் என்கிற புதிய கல்வித் திட்டத்தைப் பற்றி விசாரணை செய்ய நிறுவப்பட்ட பாருலேகர் குழுவினர், ஆரம்பப் பாடசாலைகளின் தற்போதைய பாட திட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டியது மிகவும் அவசியம் என்றும், அதற்காக ஒரு கமிட்டி அமைக்க வேண்டியதும் அவசியம் என்றும் தெரிவித்திருந்தார்கள். பாருலேகர் குழுவினரின் அந்தக் கருத்திற்கிணங்க அமைக்கப்பட்ட பாடத் திட்டத் திருத்தக் குழுவினர், தற்போதுள்ள பாட திட்டத்தை எந்தெந்த வகையில் மாற்றியமைக்கலாம் என்பதைப் பற்றித் தங்கள் தங்கள் கருத்துரைகளைத் தெரிவிக்கும்படியாக ஆரம்பப் பள்ளி மானேஜர்களுக்கும், ஆரம்ப ஆசிரியர்களுக்கும், பெற்றோர் சங்கங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கையின் நகல் ஒன்றை ஆங்கிலத்தில் நமது "ஆரம்பக் கல்வி"யின் இந்த மாத இதழில் வேறு ஓர் இடத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

மூன்று மணி நேரப் பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்திற்கு வெளியே அரைவேளைக் கைத்தொழிற் கல்வி, ஷிப்டு முறை ஆகிய நடைமுறைகளை உள்ளடக்கிய புதிய கல்வித் திட்டத்தை மனதில் வைத்துக்கொண்டே, ஆசிரியர்களும் பிறரும், தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று சுற்றறிக்கையின் தொடக்கத்திலேயே வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இப்படி வற்புறுத்துவது ஏன் என்பது நமக்குத் துளியளவும் புரியவில்லை. குழந்தைகளின் வளர்ச்சியைக் குலைக்கும் திட்டம் என்று ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனை பேராலும் ஒதுக்கித் தள்ளப்பட்ட திட்டம், புதிய கல்வித் திட்டம். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்—டாக்டர் லட்சுமணசாமி முதலியார், முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் எஸ். ஜி. மணவாள ராமாநுஜம், காந்தீயப் பேராசிரியர் குமரப்பா, கலை பலவல்ல பேரறிஞர் சோமசுந்தர பாரதியார், நூல் பல இயற்றியுள்ள நுண்ணறிவாளர் சுத்தானந்த பாரதியார் முதலிய அறிஞர் பெருமக்கள் அத்தனைபேராலும் தீமை பயக்கும் திட்டம் என்று சித்தரிக்கப்பட்டிருக்கும் ஓர் ஏற்பாடு, புதிய கல்வித் திட்டம். திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், சோஷியலிஸ்ட் கட்சி, உழைப்பாளர் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய அத்தனை அரசியல் கட்சிகளாலும் முழு மூச்சுடன் எதிர்க்கப்படும் உதவாக்கரைத் திட்டம், புதிய கல்வித் திட்டம். மக்கள் மன்றத்திலேயும் சரி, ஆசிரியர் உலகிலே

யும் சரி, இந்தத் திட்டத்திற்கு அணுவளவும் ஆதரவு கிடையாது. காங்கிரஸ் கட்சியிலேயே கூட, மிகப் பெரும்பாலோர், இந்தத் திட்டத்தை மனமார வெறுத்து வாயாரக் கண்டிப்பவர்களாகவே உள்ளனர். தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜ நாடார் அவர்களே இந்தத் திட்டத்தைக் கடைந்தெடுத்த பிற்போக்குத் திட்டம் என்று அறிவித்திருக்கிருர்கள். அமைச்சர் ஆச்சாரியார் அவர்கள் எதைச் சொன்னாலும் அதற்கு "ஆமாம்" போடுவதையே தங்களுடைய பிறவிப் பயன் என்று கருதிக் கொண்டிருக்கிற ஓர் ஏழெட்டுப் பேரையும், அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்க்க முடியாத நெருக்கடியில் இருக்கிற அரசாங்க அதிகாரிகளையும் தவிர, மற்றப்படி, எந்த நல்லறிவாளரும் புதிய கல்வித் திட்டத்தை ஒப்புக்கொள்ளவில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது, புதிய கல்வித் திட்டத்தை அப்படியே வைத்துக்கொண்டே அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டுமென்று கூறுவது எந்த வகையில் நியாயம்?

ஆட்சியாளர்களின் கையில் அதிகாரம் இருக்கும் காரணத்தினுல், தங்கள் விருப்பப்படியும், மூன்று மணி நேரப் பாடசாலை திட்டத்திற்கு ஏற்ற வகையிலும், தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட கல்வியதிகாரிகளைக் கொண்டே ஓர் பாட திட்டத்தைத் தயாரித்துவிடலாம்—தயாரித்துக் கொண்டிருப்பதாகவும் கேள்வி. நிலைமை அப்படி இருக்கும்போது, புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படைகளையே ஒப்புக்கொள்ளாத ஆரம்ப ஆசிரியர்களைப் பார்த்து, அந்தக் கல்வித் திட்டத்தின் நடைமுறைகளை மாற்றுமிலே கருத்துரை தெரிவியுங்கள் என்று கூறுவதில் அர்த்தமென்ன இருக்கிறது? ஏதோ அரசாங்கத்தார் தங்களைக் கலந்து செய்வதில்லை என்று ஆரம்ப ஆசிரியர்கள் கூக்குரல் இடுகிருர்களே என்பதற்காக, அவர்களைக் கண் துடைக்கும் முறையில் செய்யப்பட்ட ஓர் ஏமாற்று ஏற்பாடாகத்தான் இந்தக் கருத்துரை அறியும் பணி காணப்படுகிறதே தவிர, உண்மையில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான முறை அல்ல இந்தச்சுற்றறிக்கை.

ஆனுல், சுற்றறிக்கையில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளில் இரண்டொன்றைத் தவிர, ஏனைய எல்லாம், புதிய கல்வித் திட்டத்திற்கும் ஷிப்ட் திட்டத்திற்கும் எந்த வகையான நேரடித் தொடர்பும் உடையன அல்ல. புதிய கல்வித் திட்டம் என்று இல்லாமல், பொதுவாக எந்த கைய கல்வித் திட்டத்திற்கும் பொருந்தக்கூடிய கேள்விகள் தான் அவை. ஆகவே, நாம், புதிய கல்வித்திட்டத்தைச் அடிப்படையில் ஒப்புக்கொள்ளவில்லை என்றபோதிலும், பொதுவாக இருக்கும் கேள்விகளுக்கு மட்

டும், நம்முடைய கருத்தைத் தெரிவிக்கவேண்டியது அவசியம் என்று கருதி, அந்தவிதமாகவே, தெரிவித்திருக்கிறோம்.

## பாடத் திட்டக் குழுவின் கேள்விகளும், நம் விடைகளும்

**1. இப்போதிருக்கிற பாடத் திட்டம் ஏறத்தாழ பதினைந்தாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. இடைக்காலத்தில் நம் நாடு சுதந்தரம் பெற்றிருக்கிறது. நம்முடைய பொருளாதார வாழ்க்கையைத் திட்டமிட்டுத் திருத்தி அமைத்து வருகிறோம். சட்டமன்றங்கள் வாயிலாகவும் பொதுமக்களின் கிளர்ச்சிகள் காரணமாகவும், சமுதாய வாழ்க்கையிலும் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த வகையாக நம் நாட்டின் அரசியல், பொருளியல், சமூக இயல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மாறுதல் ஏற்பட்டுள்ள காரணத்தால், இந்த மாறுதல்களுக்கு ஏற்ற வகையில், பாடத் திட்டத்தில் ஏதாவது மாறுதல்கள் செய்யவேண்டுமா? ஆம் எனில் எத்தகைய மாறுதல்கள்?**

அரசியல், பொருளியல், சமூக இயல் ஆகிய துறைகளில் மகத்தான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பது உண்மைதான். ஆனால் அந்த மாறுதல்கள் காரணமாக, ஆரம்பப் பள்ளிப் பாடத் திட்டத்தில் தீவிரமான மாறுதல் எதுவும் செய்யவேண்டிய அவசியம் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. சமுதாய பொருளாதார அரசியல் மாறுபாடுகளின் விளைவாக உடனடியாகவும் தீவிரமான அளவிலும் பாதிக்கப்படக்கூடிய இடம், கல்லூரிக் கல்விதான். ஆகவே அந்தக் கல்வியின் பாடத் திட்டத்தில் வேண்டுமானால் மாறுதல்களை ஏற்படுத்தலாமே தவிர, ஆரம்பப் பள்ளியின் பாடதிட்டத்தில் பெரிய அளவு மாறுதல் எதுவும் தேவை இல்லை.

ஆனால், பகுத்தறிவு உணர்ச்சியும், எதையும் ஆராய்ந்து பார்க்கும் சிந்தனையும், விஞ்ஞான மனப்பான்மையும் வேகமாக வளர்ந்துள்ள இந்தக் காலத்திலும், சில பாடபுத்தகங்களில், மூட நம்பிக்கையை வளர்க்கும் கருத்துக்களும், தலைவிதி தத்துவத்தை நிலை நாட்டும் கதைகளும், உளுத்துப்போன பல பழங்காலக் கொள்கைகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இது கூடாது. பாட புத்தகங்களில் பகுத்தறிவு உணர்ச்சி முதல் இடம் பெறவேண்டும். அச்சம் தயை தாட்சண்யமற்ற சிந்தனைசக்தியை வளர்க்கத் தக்க கதைகள் கட்டுரைகள் ஏராளமாக இருக்கவேண்டும். சில பாட புத்தகங்களில், குறிப்பிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களையோ அல்லது குறிப்பிட்ட சில மதங்களின் நடைமுறைகளையோ பாராட்டி எழுதுகிற துவேஷ மனப்பான்மை காணப்படுகிறது. இதுவும் இருத்தலாகாது. சாதி, மத, கட்சி, பழமை வெறிகள் நுழைய முடியாத வகையில் பாடத் திட்டம்

அமைக்கப்பட வேண்டும். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்கிற அறிஞர்களின் பொன் மொழிப்படி குழந்தைகளின் உள்ளம் வளர வழி வகுக்க வேண்டும் பாடபுத்தகங்கள்.

**2. ஆரம்பப் பள்ளிகளில் அளவுக்கு அதிகமான பாடங்கள் இருக்கின்ற காரணத்தால், அவற்றில் சிலவற்றை ஒன்றாக இணைத்து ஒரே பாடமாகக் கொண்டு வரலாம். எடுத்துக்காட்டாக, ஆட்சி முறை (Civics) இயற்கை நூல் (Nature Study), நில நூல் (Geography) ஆகிய மூன்று பாகங்களையும் ஒன்றாக இணைத்து, குழந்தைகளின் சூழ்நிலை (Child's Environemnet) என்கிற ஒரே பாடமாகக் கொண்டுவரலாம். கணக்கும் தமிழும் தனியாக இருக்கலாம். இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?**

தற்போதுள்ள பாடங்கள் அளவுக்கு அதிகமானவை என்பது தவறான கருத்து. தமிழ், கணக்கு, ஆட்சிமுறை, இயற்கை நூல், நில நூல் ஆகிய ஐந்து பாடங்கள் தான் தற்போது இருந்து வருகின்றன. இவை ஐந்தும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு நிச்சயம் தேவையானவை. தேவையானவை என்பது மட்டுமல்ல, இவை ஒவ்வொன்றும் தனித் தனியாக இருப்பதே நல்லது. தனித் தனியாக இருந்தால்தான் ஒவ்வொரு பாட நூலின் அடிப்படைக் கருத்துக்களைக் குழப்பமில்லாமலும் தெளிவாகவும் இளம் பிள்ளைகள் அறிந்துகொள்ள முடியும். உயர் நிலைப் பள்ளிகளில் முன்னர் தனித் தனியாக இருந்த விஞ்ஞானம், வரலாறு, நிலநூல் ஆகிய மூவகைப் பாட நூல்களும் அன்பர் அவினாசிலிங்கனார் அமைச்சராக இருந்த காலத்தில், ஒரே பாடநூலாக இணைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டு வருகிறது. அர்த்தமற்ற அந்த இணைப்பின் விளைவாக, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், இந்த மூவகைப் பாட நூல்களில் எந்த ஒரு நூலிலும் போதிய பயிற்சியோ திறமையோ பெற முடியாமல் தத்தளிக்கிறார்கள். எனவே அதே வகையான குழப்பத்தை ஆரம்பப் பள்ளிகளின் பாட திட்டத்திலும் நுழைக்க முயல்வது அறிவுடைமை ஆகாது. நிலநூலைப் பொறுத்த வரையில் வேண்டுமானால் வெளி நாடுகளைப் பற்றி உள்ள பாடங்களில் சிலவற்றை மட்டும் எடுத்துவிடலாம். அந்தப் பாடங்களிலும் எல்லாவற்றையும் எடுத்துவிடக்கூடாது. நம் நாட்டு மாணவர்கள், பிற நாடுகளில் உள்ள தம்மனைய மாணவர்கள் எவ்வகையில் வாழ்கிறார்கள் என்பதைச் சிறிதளவேனும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம். அப்போதுதான் மாணவர்களின் உள்ளத்தில் பரந்த மனப்பான்மையும் உலக சகோதரத்துவம் என்கிற நல்லெண்ணமும் வேரூன்ற முடியும்.

**3. பாடபுத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வித்**

**திட்டத்தையா? அல்லது, செய் முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட பாட திட்டத்தையா—எதை நீர் விரும்புகிறீர்?**

ஆரம்பப் பள்ளிச் சிறுவர்கள், பத்து வயதுக்குஉட்பட்ட இளங் குழந்தைகள். அவர்களால் செயல் முறைக் கல்வியைச் சரியான முறையில் புரிந்துகொள்ள இயலாது. அத்தகு கல்வியைப் பெறுவதற்குத் தேவையான அளவு கடினமான சிந்தனை சக்தி அவர்களிடம் இருக்காது. ஆகவே ஆரம்பப் பள்ளி மாணவர்களைப் பொறுத்தவரையில் பாட புத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியே சாலச் சிறந்தது. உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு வேண்டுமானால் செய் முறைக் கல்வியை ஓரளவு வைத்துக்கொள்ளலாம்.

**4. தற்போதுள்ள பாடதிட்டம் ஒரு குழந்தையின் முழு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பொருத்தமானதுதானா? இல்லை என்றால், எத்தகைய மாறுதல்கள் தேவை?**

தற்போதுள்ள பாடதிட்டம் குழந்தையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பொருத்தமானதுதான். மாறுதல் எதுவும் தேவை இல்லை. தற்போதுள்ள பாடதிட்டம் ஆங்கிலேய ஆட்சியினரால் வகுக்கப்பட்டது என்கிற காரணத்திற்காகத்தான் அதை மாற்றவேண்டுமென்று ஒரு சிலர் பிடிவாதம் காட்டுகிறார்கள். ஆனால் அந்தப் பிடிவாதம் பொருளற்றது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்கிற திருக்குறள் பொன்மொழிக்கு இணங்க ஒரு பொருள் சிறந்ததா, அல்லவா என்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டுமே தவிர, அந்தக் கருத்துரையைக் கூறியவன் எவன் என்பதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. எந்தப் பொருளை எவன் கூறினாலும் அந்தப் பொருளில் நியாயம் இருக்குமானால் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லையானால் தள்ளிவிடவேண்டும். இதுதான் முறை. இந்த முறைப்படி பார்க்கும்போது, இப்போதுள்ள பாட திட்டம் வெள்ளைக்காரர்களால் வகுக்கப்பட்டதுதான் என்ற போதிலும், அது சிறந்த திட்டமாக இருக்கிற காரணத்தால், அதனை மாற்றவேண்டிய அவசியம் துளியும் இல்லை. உலகத்தில் பிறபல நாடுகளில் இருக்கிற கல்வித் திட்டமும் கிட்டத்தட்ட இதே வகையான திட்டமாகத்தான் இருக்கிறது. பண்டித நேரு, டாக்டர் ராதாகிருஷ்ணன், உத்தமர் காந்தியடிகள், வீரர் வல்லபாய் படேல், தலைவர் ராஜேந்திர பிரசாத், அறிஞர் ராமசாமி முதலியார், கல்வி நிபுணர் டாக்டர் லட்சுமணசாமி போன்ற சிந்தனைச் சிற்பிகள் அத்தனைபேரும் இப்போதுள்ள கல்வித் திட்டத்தின்படி படித்து முன்னேறிய மாபெரும் தலைவர்கள்தான். இப்போதுள்ள கல்

வித் திட்டம் அபாயமானது அல்லது பயனற்றது என்பது உண்மையானல், இத்தகு கல்வித் திட்டத்தின் மூலமாக இத்தனைப் பேரறிஞர்களையும், உலகம் போற்றும் உத்தமர்களையும் நாம் எப்படிப் பெற்றிருக்க முடியும்? இப்போதுள்ள கல்வித் திட்டத்தின் மூலமாக இத்தனைப் பேரறிஞர்களை நாம் பெற்றிருக்கும் பெருமை ஒன்றே போதும் இந்தத் திட்டத்தின் சிறப்பை நிலை நாட்டுவதற்கு. எனவே, இன்றைய திட்டத்தை எப்படி மாற்றி அமைக்கவேண்டும் என்பது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. இப்போதுள்ள சிறந்த பாடதிட்டத்தை வைத்துக்கொண்டே, கல்வியை, நூற்றுக்கு நூறு பேரும் பெறும்படியாக எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்சினை.

**5. ஆரம்பப் பள்ளிப் பாடத் திட்டத்தில் விருப்பப் பாடங்கள் (optional subjects) என்கிற முறையிலும் நிலையிலும் புதிதாகச் சில பாடங்களைச் சேர்க்கவேண்டியது அவசியமா? ஆம் எனில், எத்தகைய பாடங்கள்?**

தனக்குத் தேவையான விருப்பப் பாடம் எது என்பதைத் தானே தெரிந்தெடுக்கக்கூடிய அளவு பக்குவம் மிகுந்த வயதல்ல ஆரம்பப் பள்ளிச் சிறுவனின் வயது. ஆகவே விருப்பப் பாடம் என்கிற ஏற்பாடு உயர் நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும்தான் ஏற்றதே தவிர ஆரம்பப் பள்ளிகளுக்கல்ல.

**6. புதிய கல்வித் திட்டத்தின்படி மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்திலும், மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்திற்கு வெளியேயும் ஆரம்பப்பள்ளி மாணவன் இருக்க வேண்டிய அவசியம் இருப்பதால், பள்ளிக்கூடத்திற்கு வெளியே பிள்ளைகள் செய்யும் வேலையை பள்ளிக்கூடப் பயிற்சியோடு தொடர்பு படுத்த எத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம்?**

வேண்டுமென்றே ஒரு தேளை எடுத்து மடியில் போட்டுக்கொண்டு, அதன் பிறகு, குத்துதே—குடையுதே — என்ன செய்யலாம் இதற்குப் பரிகாரம் என்று கேட்பதைப்போலிருக்கிறது இந்தக் கேள்வி! ஆயிரம் குறைகளை உடைய ஒரு புதிய திட்டத்தை அன்புடன் தழுவிக்கொள்வானேன்? அப்படித் தழுவிக் கொண்ட பிறகு, அதில் உள்ள குறைகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டி, இதனைப் போக்க என்ன வழி என்ன வழி என்று தேடித் தேடிப் பார்ப்பானேன்? புதிய திட்டத்தை ஒழித்துவிட்டால், அந்தத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் யாவும் தாமாகவே தீர்ந்துவிடும்.

மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்தில் இருக்கும் நேரம் போக ஏனைய மூன்று மணி நேரம் பள்ளிக்கூடத்திற்கு வெளியே இருக்கும்படி ஆரம்பப் பள்ளிச் சிறுவனை வற்புறுத்துவது, அவனுடைய எதிர்காலத்தையே பாழாக்குவதாகும். பள்ளிக்கூடத்திற்கு வெளியே இருக்

தம் மூன்று மணி நேரத்தை, அவன், தன் பெற்றோர்களின் தொழிலைக் கற்றுக்கொள்வதில் செலவிடுவானா என்றால் நிச்சயமாக மாட்டான். ஏனெனில், அவனுடைய பெற்றோர்களுக்கு, தங்கள் குடும்பத்தை நடத்துவதற்குத் தேவையான பணம் தேடும் முயற்சிக்கே நேரம் போதாமல் இருக்கும்போது, தங்கள் பிள்ளைக்குக் கல்வி புகட்டிக்கொண்டிருக்க நேரம் எப்படி இருக்க முடியும்? ஒருவேளை நேரம் கொஞ்சம் இருந்தாலும், பெற்றோர்களின் தொழிலைப் பிள்ளைகள் கற்றுக்கொள்வது நடக்கக் கூடிய காரியமல்ல. நாவிதனின் தொழில் க்ஷவரம் செய்வது. ஆனால் அவனுடைய ஆறு வயதுப் பிள்ளையால் கத்தியை எடுத்து க்ஷவரம் செய்ய முடியுமா? அப்படியே அந்தக் குழந்தையால் க்ஷவரம் செய்ய முடியும் என்றாலும் அத்தகு குழந்தையிடம் க்ஷவரம் செய்துகொள்கிற தைரியம் எந்தக் கிராம வாசிக்காவது இருக்க முடியுமா? ஆகவே பள்ளிக்கூடத்திற்கு வெளியே இருக்கிற நேரத்தில், ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் கண்ட இடங்களில் அலைந்து திரிந்து தங்கள் உடலையும் உள்ளத்தையும் வீணாக்கிக்கொள்கிற கொடுஞ் செயல்தான் நடைபெறுமே தவிர, உருவான தொழில் கற்பது என்பது ஒருக்காலும் நடைபெறாது. ஆகவே புதிய கல்வித் திட்டத்தை உடனடியாக வாபீஸ் வாங்கவேண்டும் என்பதுதான் இந்தக் கேள்விக்கு ஏற்ற சரியான விடை.

## 7. ஒரு குழந்தையின் தோற்றமும் வசீகரமும் அறிவும் ஒன்றோடொன்று இணைந்து முன்னேறும் வகையில் பாட திட்டத்தை எவ்வாறு தேர்ந்தெடுப்பாய்?

இது ஓர் அசம்பாவிதமான கேள்வி. கிண்ணம் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கும் கந்தசாமியின் பிள்ளைக்கும், கட்டத் துணியின்றிக் கதறித் துடிக்கும் கண்ணுசாமியின் குழந்தைக்கும் பாட திட்டத்தின்மூலம் வசீகரத்தை எப்படி உண்டாக்குவது என்பது நமக்குத் தெரியவில்லை. வறுமையின் கொடுமையாலும் போதுமான உணவில்லாத வேதனையாலும் தத்தளிக்கும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளே,* கிராமப் பள்ளிகளில் உள்ள பெரும்பாலான குழந்தைகள். இத்தகைய குழந்தைகளுக்கு பாடதிட்டத்தின் மூலமாக உற்சாகமும் ஏற்படாது. வசீகரமும் உண்டாகாது. ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்கு உண்மையிலேயே வசீகரத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமாயிருந்தால் அவர்கள், ஒவ்வோர் ஆரம்பப் பள்ளிச் சிறுவனுக்கும் காலையில் ஓர் ஆழாக்குப் பாலும், நடுப் பகலில் வயிறார உணவும் இலவசமாக அளிக்கத் திட்டம் வகுக்க வேண்டும். இன்றைய கல்வித் திட்டத்தில் வேறு எந்தவகையான மாறுதலையும் செய்யவேண்

டாம். இந்த ஒரு மாறுதலைமட்டும் செய்யட்டும். மாணவர்களுக்கு வசீகரமும் உற்சாகமும் மட்டுமல்ல, பாட புத்தகங்களில் அக்கறையும் ஆர்வமும் கூடத் தாமாக ஏற்பட்டுவிடும்.

**8 (a) தற்போதுள்ள ஆரம்பப் பாடசாலைப் பாடதிட்டம் உமக்குத் திருப்திகரமானதுதானா? பாடதிட்டத்தின் எந்தப் பகுதிகள் தகுதியற்றன என்று உமக்குத் தோன்றுகின்றன ? பாடதிட்டத்தில் எந்தெந்தப் புதிய பகுதிகள் சேர்க்கப்படவேண்டுமென்று நீர் கருதுகிறீர் ?**

மொத்தமாகப் பார்க்கிற போது இப்போதிருக்கிற பாடதிட்டம் மிகவும் சிறந்தது. ஆகவே அதில் பெரிய அளவில் எத்தகைய மாறுதலும் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் சிற்சில சிறிய மாறுதல்கள் மட்டும் தேவைப்படுகின்றன.

தமிழ்ப்பாடத்தைப்பொறுத்த வரையில், பகுத்தறிவுக்கு ஒவ்வாதனவும், ஆராய்ச்சிக்கு நில்லாதனவுமாகிய புராணக்கதைகள் பல தமிழ்ப் பாட புத்தகங்களில் இந்த 1954இலும் இடம் பெற்று வருகின்றன. இந்த இழிநிலை மாறவேண்டும். எடுத்துக்காட்டாக, ஜீவகாருண்யத்தின் சிறப்பை எடுத்து விளக்குவதற்காக சிபிச் சக்ரவர்த்தியின் கதை இன்னமும் கையாளப்படுகிறது. ஒரு புறாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அதைத் துரத்தி வந்த கருடனுக்குத் தன் தொடையிலுள்ள சதையின் ஒரு பகுதியை அறுத்துக் கொடுத்தானாம் சிபி. இதற்குப் பெயர் ஜீவகாருண்ய உணர்ச்சியாம். இத்தகு பணிபுரிந்த சிபி ஒரு மாபெரும் தியாகபுருஷனாம். அவனைப் போலவேநாம்எல்லோரும்புண்ய மூர்த்திகளாகவாழவேண்டுமாம். கூறுகிறது கதை. ஆனால் இதை விட அறிவுக்கு ஒவ்வாத கதை வேறொன்று இருக்கமுடியுமா ? புறாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக யாராவது தன் சதையை அறுத்துக் கொடுக்க இயலுமா ? அப்படியே அறுத்துக் கொடுத்தாலும் அதன் பெயர் அறிவுடைமை ஆகுமா? இப்படிப்பட்ட பத்தாம் பசலிப் புராணப் பொய்மைகள் பாடபுத்தகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்.

நில நூல் பாடத்தில், குறிப்பாக ஐந்தாம் வகுப்பில்நம் நாட்டுச் செய்திகளைவிட, பிற நாட்டுச் செய்திகளே ஏராளமாக இருக்கின்றன. இது முறை அன்று. பிற நாட்டு நகரங்கள்—தொழில்கள்—வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களைக் குறைத்து, நம்நாட்டு நகரங்கள்—தொழில்கள்—வாழ்க்கை முறைகள் ஆகிவற்றைப் பற்றிய விளக்கங்களைக்கூடுதலாக்கவேண்டும்.

ஆங்கில பாடங்களை மீண்டும் மூன்றும் வகுப்பிலிருந்து முன் இருந்தது போலவே தொடங்க வேண்டும். அன்பர் அவினாசிலிங்கனார் அமைச்சராக இருந்த காலத்தில் ஆரம்பப் பள்ளிகளி

லிருந்து ஆங்கிலம் அனாவசியமாக அகற்றப்பட்டது. அப்படி அகற்றப்பட்டதன் விளைவாக உயர் நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களின் தரம் மிக மிகக் குறைந்து விட்டது. கல்லூரிகளில் ஆங்கிலமொழியே போதனா மொழியாக இருக்கிற வரையில் உயர் நிலைப்பள்ளிகளிலும் சரி, ஆரம்பப் பள்ளிகளிலும் சரி, ஆங்கிலத்திற்கு ஒரு சிறப்பான இடம் இருந்தே தீர வேண்டும்.

ஆங்கிலேய ஆட்சியின் மீது காட்டப்பட்ட வெறுப்பு ஆங்கில மொழியின் மீதும் இதுவரை தன் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி இந்த நாட்டில் இருந்த காலத்தில், அவர்களுடைய ஆட்சி மீது இருந்த வெறுப்பின் காரணமாக அவர்களுடைய மொழியின் மீதும் ஆத்திரம் ஏற்பட்டது நியாயமல்ல என்றாலும் இயற்கையானது. ஆனால் இந்தியா விடுதலை பெற்றுவிட்ட இந்தக் காலத்திலும் ஆங்கில மொழியின் மீது வெறுப்புக் காட்டுவதில் துளியும் பொருளில்லை. ஆங்கில மொழியின் மூலம் பெறக்கூடிய அளவு விஞ்ஞான அறிவையோ பிறபல் துறைகளின் விளக்கங்களையோ வேறு மொழிகளிலிருந்து பெற முடியாது என்பது உலகம் அறிந்த உண்மை. கல்லூரிக் கல்வியில் ஆங்கில மொழியைப் போதனா மொழி என்கிற பீடத்திலிருந்து விரட்ட நம்மால் இன்னமும் முடியவில்லை. இத்தகு நிலையில் ஆரம்பப் பள்ளிகளிலிருந்து ஆங்கிலத்தை அடியோடு அகற்ற வேண்டிய அவசியமென்ன? ஆகவே ஆரம்பப் பள்ளிகளில் மீண்டும் ஆங்கில மொழி கற்பிக்கப்பட வேண்டும்.

**8 (b) மூன்று மணி நேரம் படிப்புப் போக மிகுதி நேரம் ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வெளியே இருக்கும்படி செய்வதுபற்றி உங்கள் கருத்தென்ன?**

பல முறை தெரிவித்திருக்கிறோம்—இத்தகு ஏற்பாட்டால் நன்மை சிறிதளவும் கிடையாது—இது முற்றிலும் வீண், வீண்!

**8 (c) பள்ளிக்கூடத்திற்கு வெளியே பிள்ளைகள் பெறுகிற அனுபவத்தைக் கல்வித் துறையின் வளர்ச்சிக்குரிய வழியில் எவ்வாறு பயன் படுத்தலாம்?**

மரத்தடியிலும் மாந்தோப்பிலும் ஏரிக்கரையிலும் குளம் குட்டைகளிலும் அலைந்து திரிந்து நேரத்தை வீணாக்குவது தான், பள்ளிக்கூடத்திற்கு வெளியே செலவிடப்படும்மூன்றுமணிநேரத்தால் மாணவர்கள் பெறுகிற பலன். இந்த அனுபவம், கல்வியின் வளர்ச்சிக்கு அணுவளவும் பயன்படாது. 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்குத் தொழிற் கல்வி தரமுயல்வதே பெருங் குற்றம். அத்தகு குற்றமிழைப்பதால் கல்வித் துறைக்கு வளர்ச்சி கிடைக்கும் என்று எண்ணுவது அதனிலும் பெருங் குற்றம்.

**9. தமிழிலும் கணக்கிலும் பிள்ளைகள் அதிகமாகத் திறமையடையவேண்டுமானால் அவற்றின் பாடதிட்டத்தை எவ்வாறு மாற்றி அமைத்தல் வேண்டும்?**

*தற்போதுள்ள பாடதிட்டமே போதுமானது. அதிலெத்தகைய மாறுதலும்தேவையில்லை. ஆனால் உடனடியாகச் செய்யப்பட வேண்டிய செயல் ஒன்றுண்டு. ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தில் ஒரு பத்து ரூபாயாவது உடனே உயர்த்தப்படவேண்டும். அப்படி உயர்த்தப்பட்டால் ஆசிரியர்களின் வாழ்க்கைக் கவலைகள் சிறிதளவு குறையும். வாழ்க்கைக் கவலை குறைந்தால் பாடங்களைப் புகட்டுவதில் அவர்களுக்கிருக்கிற ஆர்வமும் ஆற்றலும் பலமடங்கு அதிகமாகும். அந்த ஆர்வமும் ஆற்றலும் கூடுதலானால், தமிழிலும் கணக்கிலும் மட்டுமல்ல, எல்லாப் பாடங்களிலுமே மாணவர்களின் திறமைநிச்சயமாகஉயரும். மாணவர்களின் திறமை உயர்வதற்குரிய ஒரு வழி இது. வேறொரு வழியை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். பள்ளிப் பிள்ளைகள் அனைவருக்கும் காலையில் ஓர் ஆழாக்குப் பாலும், நடுப்பகலில் வயிறார உணவும் இலவசமாக அளிக்கப்படவேண்டும். இந்த இரு ஏற்பாடுகளையும் அரசியலார் செய்து முடித்தால் போதும். மாணவர்களின் திறமை தானாக உயர்ந்து விடும்.*

**10 ஒவ்வொரு பாடத்திலும் குறிப்பிட்ட அளவு பாடத் திறமையை வரையறுக்கவேண்டுமா? ஆமெனில் எந்த முறையில்?**

*அவ்வாறு வரையறுக்க வேண்டிய அவசியமில்லை. குழந்தைகளின் அறிவு வளர்ச்சி எல்லாப் பாடங்களிலும் ஒரேவகையாக இருக்கமுடியாது. எல்லாப்பாடங்களிலும் காட்டப்படும் திறமைகளை ஒன்றாக வைத்துக் கணக்கிட்டுத்தான் மாணவர்களின் சராசரி திறமையை நிர்ணயிக்கவேண்டும்.*

**11 ஏறத்தாழ ஒரேவயதுடைய பிள்ளைகளாலும், அறிவிலும் திறமையிலும், ஒருவருக்கொருவர் பெரிதும் மாறுபடுகின்றனர். இந்த ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்காகப் பாடதிட்டத்தை எவ்வாறு மாற்றி அமைத்தல் நல்லது?**

*இது மிகவும் சிக்கலானதோர் கேள்வி. ஒரே வகுப்பில் உள்ள பிள்ளைகள், ஒருவருக்கொருவர், அறிவிலும் திறமையிலும் வேறுபடுவது உண்மைதான். ஆனால் இப்படிப்பட்ட வேறுபாடுகள் பாடதிட்டத்தின் விளைவாக ஏற்படுவன அல்ல. சூழ்நிலையின் தன்மை, பெற்றோர்களின் படிப்பறிவு, குடும்பத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்களுக்குப் பிள்ளைகளின் கல்வியில் உள்ள அக்கறையின் அளவு, பிறப்பிலேயே தோன்றும் அறிவு நுணுக்க வேறுபாடுகள்,* (Hereditary qualities) *பெற்றோர்களின் வறுமை அல்லது செல்வ நிலை ஆகிய பல்வேறு காரணங்களால் பிள்ளைகளின் அறிவு நிலையில்*

ஒருவருக்கொருவர் வேறுபாடுகள் இருக்கின்றன. மற்ற எல்லாக் காரணங்களையும் விட மிகவும் முக்கியமாகப் பெற்றோர்களின் படிப்பறிவும், செல்வ நிலையும், பிள்ளைகளின் கல்வித் தரத்தை மிகவும் பாதிக்கின்றன. போதுமான படிப்பும், பண வசதியும் இல்லாத பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, பள்ளிக் கூடத்தில் ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதற்கு அதிகமாக வீட்டில் தனிப் பயிற்சி எதுவும் தர இயலாமல் போய்விடுகிறது. ஆனால் அதே நேரத்தில், எஞ்சினியர், வழக்கறிஞர், டாக்டர், பணம் படைத்தவர், படிப்பறிவுள்ளவர் ஆகிய இத்தகைய பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு, வீட்டில், பெற்றோர்களுக்கு ஓய்விருந்தால் பெற்றோர்களிடமிருந்தோ அல்லது அவர்களுக்கு ஓய்விராவிட்டால் தனிப்பட்ட ஆசிரியரை வைத்தோ கூடுதலான அளவு கல்வியறிவு பெறஇயல்கிறது. ஆகவே இப்படிப்பட்ட வேறுபாடுகள், ஏழை—பணக்காரன் என்கிற இருவேறு சமுதாயஅமைப்புகள் இருக்கிற வரையில் இருந்தே தான்தீரும். இவற்றை, பாடதிட்டத்தின் மூலமாக மாற்றுவதென்பது நடவாத காரியம்.

**12 நிகழ்காலத்திலிருந்து தொடங்கி இறந்த காலத்திற்குப் போவதும், அண்மையில் உள்ளவற்றிலிருந்துதொடங்கித்தொலைவில்உள்ளவற்றிற்குப் போவதும் கல்வி முறையின் சிறந்ததோர் கொள்கையாகும். அத்தகு கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்காகப் பாடதிட்டத்தை எவ்வாறு மாற்றி அமைக்கவேண்டும்?**

இருக்கிறபாடதிட்டம் ஏறத்தாழ இந்த முறையில்தான் இருக்கிறது. மாற்றம் அவசியமில்லை.

**13 தற்போது நடைமுறையில் உள்ள நில நூல் (Geography) பாடங்கள் சிறு பிள்ளைகளுக்கு அதிகமென்றும், அதிலுள்ள பல பாடங்கள் பிள்ளைகளின் சூழ்நிலைக்குத் தக்கவாறு இல்லை என்றும் ஒரு கருத்து உலவுகிறது. இது பற்றி உங்கள் எண்ணம் யாது?**

நம் நாட்டைப் பற்றித் தெரிவிக்கப்படுவதைவிடப் பிற நாடுகளைப்பற்றி அதிகப்படியான விவரங்கள் தரப்படுகின்றன' என்பதைத் தவிர இப்போதுள்ள நில நூல் பாடதிட்டம் பொருத்தமானதே. வேறு மாற்றம்எதுவும் தேவையில்லை. இப்போதிருக்கிற பாடதிட்டப்படி. நான்காவது வகுப்பில் இந்தியாவைப்பற்றியும ஐந்தாவது வகுப்பில்உலகத்தைப் பற்றியும் போதிக்கப்படுகின்றன. பல பிள்ளைகள் ஐந்தாவது வகுப்போடு தங்கள்கல்வியை முடித்து விடுகின்றனர் என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், இப்போதுள்ள பாடதிட்டம் அதிகமல்ல என்பது விளக்கமாகும்.

**14. பாடசாலையின் சூழ்நிலைக்கும் சுற்றுப்புறத்திற்கும் தக்கவாறு தற்போதுள்ள பாடதிட்டத்**

**தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் இடையூறுகள் உண்டா? உண்டாயின் அவற்றிற்குரிய பரிகாரங்கள் எத்தகையன?**

*தற்போதுள்ள பாடதிட்டத்தில் எத்தகைய இடையூறுமில்லை. மூன்றுமணி நேரம்தான் கல்வி என்றால், பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாதது மட்டுமல்ல, ஆசிரியர்களை மனம்போனபடி தூற்றுகிறார்கள். ஆகவே புதிய கல்வித் திட்டத்தை ஒழித்துக் கட்டினால் அதுவே போதுமானது. வேறு மாறுதல் தேவையில்லை.*

**15. ஆதாரக் கல்வியின் எத்தகைய பகுதிகளை ஆரம்பப் பள்ளித் திட்டத்தில் புகுத்த முடியும்?**

*ஆதாரக் கல்வித்திட்டம் அர்த்தமும் அவசியமுமற்ற திட்டம் என்பது நல்லறிஞர்களின் முடிவு. ஆகவே அத்தகு திட்டத்தை ஆரம்பக்கல்வியில் புகுத்தவேண்டிய தேவை சிறிதும் கிடையாது. அப்படிப் புகுத்தினால் அதனால் கல்வியின் தரம் குறையுமே தவிர உயர்வடையாது. இந்தப் பிரச்சினையைக் குறித்து சென்ற மாத இதழின் தலையங்கத்தில் விளக்கமாக எழுதியிருக்கிறோம். ஆகவே மீண்டும் விளக்க வேண்டிய அவசியமில்லை.*

**16. கொடியேற்றல், பிரார்த்தனை புரிதல், மாணவர்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும் முறை, சுகாதார செயல்திட்டம், விழாக்கள் நடத்துதல், இன்னபிற கலாச்சார நிகழ்ச்சிகள் உற்சாக நிழ்ச்சிகளை ஆரம்பப் பள்ளிப்பாட திட்டத்தில் புகுத்துவதால்நன்மை விளையும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?**

*இத்தகு நிகழ்ச்சிகளெல்லாம், இப்போதே, அந்தந்த வட்டாரத்தின் சூழ்நிலைக்கும், வாய்ப்புகளின் தன்மைக்கும், பெற்றோர்கள்—பொதுமக்களின் ஒத்துழைப்புக்கும் ஏற்ற அளவில், ஆசிரியர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இதனை இப்போது உள்ளபடி அந்தந்தப் பாடசாலையின் வாய்ப்புகளுக்கும் விருப்பத்திற்கும் ஏற்றபடி நடக்குமாறு விட்டுவிடுவதுதான் நல்லதே தவிர, பாடதிட்டத்தில் புகுத்துவதால் குழப்பம்தான் உண்டாகும்.*

**17. ஆரம்பப் பள்ளிப் பாடதிட்டத்தை மாற்றும் வகையில் வேறு ஏதாவது கருத்துக்கள் உண்டா?**

*நம் நாடு இருக்கும் சூழ்நிலையில் தற்போதுள்ள பாடதிட்டமே போதுமானது. மாற்றம் வேண்டியதில்லை. அப்படி ஏதாவது மாற்றம் தேவையென்று அரசாங்கம் கருதினால், டாக்டர் லட்சுமணசாமி முதலியார் பேராசிரியர் பாரதியார், டாக்டர் மணவாளராமாநுஜம், டாக்டர் மு. வரதராசன், போன்ற கல்வித் துறை வல்லுநர்களையும், ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழுவை*

அமைத்து, எல்லா ஆரம்ப ஆசிரியர் சங்கங்களுக்கும் குறைந்தது இரண்டு மாதகாலமாவது தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்புக் கொடுத்து, அவர்களின் கருத்தை அறிந்து அதன் பிறகு திட்டம் வகுக்கவேண்டும். ஆனால் தற்போது அரசாங்கத்தார் அமைத்துள்ள பாடதிட்டத் திருத்தக் குழுவின் உறுப்பினர்களில் மிகப் பலர் அரசாங்க அதிகாரிகளாக உள்ளனர். அரசாங்கத்தின் கருத்துகள் எவ்வளவு தான் தவறானவையாக இருந்தாலும், அவற்றிற்கு மாறான கருத்தை அரசாங்க அதிகாரிகளால் எவ்வாறு தெரிவிக்க இயலும்? ஆகவே அரசாங்க அதிகாரிகளைக் கொண்டதோர் குழுவை அமைப்பதும், குழுவே அமைக்காமல் ஆட்சிப் பீடத்தவர்கள் தம்மனம் போனபோக்கில் திட்டம் வகுப்பதும் இரண்டும் ஒன்றேதான்.

அதுமட்டுமல்ல மூன்றுமணி நேரக் கல்வியை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எடுத்த எடுப்பிலேயே இத்தகைய தவறான அடிப்படையில் தொடக்கமாகும் சுற்றறிக்கையால் நாட்டின் கல்வி நிலை உயரவா முடியும்?

நமக்கு நம்பிக்கையில்லை.

---

## அறிஞர் வாயுறை

வாழ்க்கையில் தன்னால் சாதிக்க முடியாதவைகளை எழுத்தாளன் தன் நூல்கள் மூலம் செய்து காட்டுகிறான்.

—பட்கே

மண்டியிட்டு நிற்கும் பெரிய மனிதனை விட, நின்றுகொண்டு ஏர் உழும் உழவனின் வாழ்க்கை மேலானது.

—பெஞ்சமின் பிராங்க்ளின்

வர்ணத்தாலும், ரத்தினத்தாலுந்தான் ஒரு பெண்ணின் இருதயத்தை ஆடவன் விலைக்கு வாங்குகிறான்.

—பிளாட்டோ

# QUESTIONNAIRE ON THE REVISION OF THE CURRICULUM AND SYLLABUS FOR ELEMENTARY SCHOOLS IN THE MADRAS STATE

The Government have appointed a Committee to revise the Elementary School Syllabus in the Madras State in view of the suggestion made by the Parulekar Committee with reference to the working of the Modified Scheme of Elementary Education. The Committee will be greatly helped by the suggestions and views of all interested in the education of children in the State particularly those of Teachers' and Parents' Associations. The views and suggestions may be expressed on the basis of answering the following questionnaire. The replies to the questionnaire should reach the Secretary of the Committee not later than the *10th February 1954*. It is not necessary that all questions should be answered. Every one may answer questions which may specially interest him or her. The following aspects of the Modified Scheme may be kept in mind while answering the questions:

(1) Reduction of work inside the school to three hours;

(2) The out-of school programme; and

(3) Shift system.

## QUESTIONNAIRE.

1. The present syllabus was framed nearly fifteen years ago. Since then we have become a free nation. We have started planning our economic life. Social changes are taking place through public opinion and legislation. Should these be taken note of in revising the existing curriculum? What are your suggestions?

2. In view of the fact that there are too many subjects in the Elementary School curriculum, will you favour the fusion of some of the subjects under broader and more comprehensive headings, for example, Civics.

Nature Study and Geography may be brought under the "Child's Environment," syllabuses in Language and Arithmetic being framed separately ?

3. Do you prefer an activity-cenetred curriculum to a subject-centred one ?

4. Do you think the present curriculum meets all the interests and needs of the child for his all round growth and development ? If not, suggest changes.

5. Is it necessary to have some additional subjects in the curriculum of Lower Elementary Standards as optional in some schools for special reasons. If so what should they be ?

6. (a) In accordance with the modified scheme of Elementary Education children will have a large part of the day to participate in the village life. What will be your suggestion to integrate schools work with the experience outside the school ?

(b) What is your opinion of the educational value of such out-of-school activities ?

(c) How should the school be enabled to exploit such experiences for educative purposes ?

7. How will you select the content for each item of the curriculum so as to contribute to the harmonious development of the child's Personality ?

8. Are you satisfied with the contents of the curriculum in our Elementary Schools Syllabuses ? What items in the different syllabuses are unsuitable ? What new items would you like to include ?

9. What suggestions can you make for the alterations, if any, of the syllabus in language and arithmetic for achieving greater efficiency in these tool subjects ?

10. Is it desirable to lay down definite standards of attainment for every class in every activity in the curriculum ? If so offer your suggestions.

11. Children of the same age group are different in their individual capacities. What provision should be made to meet such differences ?

12. It is a sound educational practice to proceed from the "here" and the "now" in the experience of the child to the "distant" and the "past" in widening his knowledge. To what extent do you think the present syllabus should be changed to accord with this view.

13. There is a general feeling that the present syllabus in Geography is too heavy and there are many points in it unrelated to the child and his environment. Do you agree ? If so, how can this be remedied ?

14. What are the problems that you had to face in adjusting the present syllabus to accord with local needs and conditions ? Suggest solutions.

15. What aspects of Basic Education Scheme can be incorporated in the curriculum for the Elementary Schools ?

16. Do you think that the following activities can be included with advantage in the curriculum of Elementary Schools :

(1) Flag Hoisting.
(2) Community Prayers.
(3) Pupils Self-Government.
(4) Sanitation Activities.
(5) Celebration of Festivals.
(6) Other Cultural and Recreational Programmes.

17. Please offer any other constructive suggestions for revising the present Elementary School Syllabus.

# தொழிற்கல்வியின் பரிதாபநிலை

(ராம. கந்தசாமி கைத்தொழில் ஆசிரியர், வேளாளர் உயர்தர ஆரம்பப்பள்ளி, புலியூரான்.)

இன்றைய முறையில் நம் நாட்டில் இருந்துவரும் கல்வி முறை பற்றிப் பல அறிஞர்களும்பலவிதமான கருத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருக்கின்றனர்; சமீப காலங்களில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கல்வி சம்பந்தமான பரிசீலனைக்குழுக்களெல்லாம் தற்போதைய கல்வி முறையை மாற்றி மக்களின் எதிர்கால வாழ்விற்குப் பயன்படும் முறையில் கல்வியைத் தொழிற் கல்வி முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற விஷயத்தில் ஒருமுகமான கருத்தைத் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போது நம் தொழிற் கல்விபற்றி பள்ளிகளில் அமுலிலிருக்கும் முறையைக் கவனித்தால் நன்கு புலனாகும். உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் 6, 7, 8 வகுப்புகளுக்குத் தொழிற் கல்வி போதிக்கப்படுகிறது. அதற்கென அப்பள்ளிகளில் ஒரு தொழிற்கல்வி ஆசிரியர் (Prevoccational Instructor) நியமிக்கப்பட்டிருக்கிறார். கைத்தொழில் பீரிடு என்று குறிப்பிட்ட நேரங்களில் அம்மாணவர்கள் தொழில் வகுப்பிற்குச் செல்லுகிறார்கள். அவர்களும் தொழிற் கல்வி கற்க வேண்டுமென்ற கல்வித் திட்டத்திற்காக, அது அவர்கள் வாழ்க்கையில் எந்த அளவு பயன்படுகிறதென்பதை யாரும் சிந்திப்பதில்லை. இந்நிலையில் நியமிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர் நிலையைப் பற்றிப் பலருக்குத் தெரியாமலிருக்கலாம். E. S. L. C. க்கு குறைந்த வகுப்பு படித்து தொழிற்கல்வி பள்ளியில் 5 வருடம் தச்சுத் தொழில் அல்லது 2 வருடம் தையல் தொழில், ஏதாவதொரு தொழில் யோக்யாம்சம் உள்ள ஆசிரியருக்குச் சம்பளம் ரூ. 10, அலவன்ஸ் 18ம், ஆக ரூ. 28 ௴ சம்பளமாக 10 ௴ங்களுக்கு மட்டும் ஒரு வருடத்தில் சம்பளம் கிடைக்கிறது. E. S. L. C. யில் பாஸ் செய்து ஷை தொழிற்கல்வி யோக்யாம்சம் உள்ள ஆசிரியருக்கு ௴ சம்பளம் 25+19 கிடைக்கிறது. இதே நிலையில் நம் சமுதாயத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் தச்சுத் தொழிலாளிக்கு ௴ வருமானம் ரூ. 75 க்கு அதிகமாகக் கிடைக்கிறது. ஒரு டெயிலருக்கும் அதே வருமானம் குறைந்த பக்ஷம் கிடைக்குமென்பதை யாரும் மறுக்க முடியாது. தொழிற்கல்விக்கென அரசாங்கம் நடத்தும் பரீட்சைகளில் நம் நாட்டில் படித்தவர்களில் 2% கூட ஆஜராவது கிடையாது. காரணம் பள்ளிகளில் பயனுள்ள முறையில் தொழிற்கல்வி போதனை

கிடையாது, பரீட்சையில் மிகக் குறைந்த மாணவர்களே பாஸ் பண்ண முடிகிறது. அப்பரீட்சை களுக்கு இருக்கும் பாடத் திட்டம் மிகப் பழமையானது; இதற் கெல்லாம் மேலாக அப்பரீட்சை யில் லோயர் கிரேட் பாஸ் செய் தவர்கள் தொழிற்கல்வி ஆசிரிய ராளுல் 25+19 ரூ சம்பளம் (க்ராண்ட்) கிடைக்கிறது. ஆனல் அதே கிரேட் பாஸ் செய்ய தகுதியுடைய ஒருவர் வெளியில் தொழிலைச் செய்தால் ரூ. 150 வரை ரூ வருமானம் சம்பாதிக்க லாம். ஹையர் க்ரேட்பாஸ் செய் திருந்தால் 40+19 க்ராண்ட் கிடைக்கிறது. ஆகவே S.S.L.C. பாஸ் செய்து தொழிலில் ஹை யர் க்ரேட் யோக்யாம்சம் உள்ள ஆசிரியர்கள் உயர்தரப் பள்ளி களுக்கும் உயர்தர ஆரம்பப் பள் களுக்கும் கிடைப்பது அரிதா யிருக்கிறது. பல பள்ளிகள் தொழிற்கல்வி ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்ற பதிலை அரசாங்கத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கின் றன. பெருவாரியான உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் நெசவுத் தொழில் கற்பிக்கிறார்கள். நெச வுத் தொழில் நாட்டில் நசித்து வருவதைக் கண்ட பெற்றோர் களின் பிள்ளைகள் அத்தொழிலில் பயிற்சிபெற விரும்புவதுமில்லை. இந்த அலங்கோல நிலையில் உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் தொழிற்கல்வி போதிக்கப்பட்டு வருகிறது.

தொழிற் கல்விபற்றிப் பிரமாத விளம்பரம் செய்யும் இன்றைய அரசாங்கம் தொழிற்கல்வி ஆசிரி யர்களின் அவல நிலையைச் சற்று கவனிக்கவேண்டும். அவர்களுக்கு இங்க்ரிமெண்ட் கிடையாது. பிரா விடெண் பண்ட் (P.F) கட்டா யம் கிடையாது இந்நிலையில் வாழ்க்கை நடத்தும் தொழிற் கல்வி ஆசிரியர்கள் விஷயத்தில் அரசாங்கம் தக்க கவனம் செலுத்த வேண்டும். தொழிற் கல்வி ஆசிரியர்களே அரிதாய்ப் போய்விட்டால் தொழிற்கல்வி பயில மாணவர்களிடத்தில் செய் யும் பிரச்சாரம் கேலிக்கூத்தா கும்.

நம் நாட்டில் 75% மக்கள் விவ சாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்வில் வகையுடன் வாழ வழியில்லாததால் படித்து உத்தியோகம் பெற முனைகிறார் கள். இந்நிலையில் விவசாயமே தொடர்பற்ற நகரங்களில் உள்ள உயர்தரப்பள்ளி மாணவர்களுக்கு விவசாயம் கற்பிக்கப்படுகிறது. நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு வாழ்வளிக்க முடியாத வகையில் சர்க்கரை என்று காகிதத்தில் எழுதி அது இனிக்கிறது என்று சொல்லுகிற மாதிரி உயர்தரப் பள்ளிகளில் விவசாயத் தொழி லில் அனுபவமற்றவர்களைக் கொண்டு விவசாயம் கற்பிப்பதும் கேலிக்கூத்தாக இருக்கிறது.

தற்போது நம் நாட்டில் எங்கு பார்த்தாலும் புதிய கல்வித் திட் டத்தை அறிஞர்கள் உள்பட பல ரும் எதிர்ப்பதைப் பார்க்கிறோம்.

இதற்கு முன் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அடிப்படைக் கல்விமுறை (Basic Education)யைப் பற்றிக் கவனிக்குமிடத்து அடிப்படைக் கல்வியின் அவசியத்தை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அக்கல்வி கற்கும் மாணவர்களுக்குப் போதிக்கப்படும் தொழில்களைப்பற்றிச் சற்று கவனிப்போம் (நூல் நூற்றல், நெசவு நெய்தல், சமையல், துப்புரவு) விவசாயம், கவலையை மாடின்றி மனிதர்களே இறைத்தல்போன்ற தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இன்றைய விஞ்ஞான உலகில் கவலையை மாடுகளுக்குப் பதில் மனிதன் இழுக்கிறானென்றால் முன்னேற்றத்தின் நிலையை அதிகம் கூற வேண்டியதில்லை. துப்புரவு, சமையல், போன்றவைகள் ஆண்கள் தொழிலல்ல. அவைகளைக் கவனிக்க அதற்கென வீடுகள் தோறும் பெண்கள் இருக்கிறார்கள். நெசவுத் தொழில் நாட்டில் இருக்கும் நிலையில் எல்லாப்பள்ளிகளிலும்எல்லாமாணவர்களுக்கும் நெசவுத்தொழில் கற்பிப்பதென்பது அர்த்தமற்றது.விவசாயத்தை எடுத்துக்கொண்டால் இருக்கும் விவசாயிகளே நம் நாட்டிற்குப் போதுமானவர்கள்.அவர்களுக்கு புதுமுறை விவசாயமும் பொருளாதாரமும்தான் தேவை. இந்நிலையில் தொழிலின் (உழைப்பின்) பெருமையை உணரச் செய்யவே பேசிக் (Basic) என்று கூறப்படுகிறது. விவசாயமோ இதர தொழிலோ செய்வதில் வாழ வழியில்லாததால் தான் இருக்கும் நிலபுலன்களையும் விற்றுவிட்டு நகரத்திற்கு வாழ மக்கள் செல்வதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். தொழில் செய்வதில் மனிதன் வாழ்வில் உயர்விருக்குமானால் உத்தியோகத்திற்குச் செல்ல யாரும் விரும்பமாட்டார்கள். உழைப்பின் பெருமையை மக்கள் வாழ்க்கையிலே காண்பார்கள். மாறுபட்ட நிலையை நாம் இன்று காண்கிறோம். உழுபவனுக்கு உண்ண உணவில்லை, தொழிலாளிக்கோ வாழ வகையில்லை. இந்நிலையில்தான் படித்த மக்கள் உத்தியோகத்தை நாடுகிறார்கள். இந்த அரிச்சுவடி புரியாமல் புஸ்தகப்படிப்பைக்குறைத்துக்குளிக்கப் போனவன் சேற்றைப் பூசிக் கொண்ட மாதிரி, எந்த ஒரு தொழிலையும் பூரணமாகக்கற்றுக் கொள்ளாத ரீதியில் இருக்கும் ஆதாரக் கல்வி என்பது எதிர்கால இந்தியாவின் முன்னேற்றத்திற்கோர் முட்டுக்கட்டையேயாகும்.

ஆகவே நம் நாட்டு மாணவர்கள் தொழிற்கல்வி கற்று, பொருளாதாரத் துறையில் நாடு நலம் பெற வேண்டுமானால் இன்றைய தொழிற்கல்வி முறை பயனற்றது. ஏட்டுச் சுரைக்காய் போன்றது. ஜப்பானிய தேசம்போன்று நம் நாட்டு மக்கள் எதிர்காலத்தில் குடிசைத் தொழில் விருத்தியடைந்து பொருளாதாரத் துறையில் பயனுள்ள முறையில் முன்னேற வேண்டுமானால்

குறைந்தபட்சப்படிப்பு E.S.L.C. யாவது முடித்தபின் அவர்களுக்கெனத் தனியாக தொழிற்கல்விக் கூடங்கள் (Industrial School) பல நிறுவப்பட வேண்டும். அதில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் தகுந்த ஊதியம் கொடுத்து நியமிக்கப்பட வேண்டும். அப்பள்ளிகளில் 1 அல்லது 2 வருடங்களில் குறிப்பிட்ட தொழிலைக் கற்றுத் தேர்ச்சி பெற வசதி அளிக்கப்படவேண்டும். அப்பள்ளிகளில் தச்சு வேலை நாடா நெய்தல், பென்சில் செய்தல், பெட்ரூம் லைட் போன்ற தகரச் சாமான்கள் செய்தல், ஆடை தயாரித்தல் (Tailoring) மின்சாரத் தறி நெய்தல், கொல்லு வேலை, மோட்டார், சைக்கிள் ரிப்பேர், தோல் பதனிடுதல், விவசாயம், நவீன விவசாயக் கருவிகளை உபயோகித்தல் போன்ற பல குடிசைத் தொழில்களைக் கற்க வழி செய்ய வேண்டும். அது குறைந்த மூலதனம் கொண்டு அவர்கள் வாழ்வில் பிற்காலத்தில் பயனுள்ள முறையில் தொழில் செய்ய முடியும். நாட்டின் தேவையும் ஓரளவு பூர்த்தியாதலோடு, நம் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிகோலியதாகும். ஆகவே இன்றைய மாணவர்கள் பயனுள்ள முறையில் தொழில் கற்க உடனடியாகப் பல தொழிற் பள்ளிகளைத் திறக்க ஆவன செய்ய வேண்டும்.

---

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

மூளைக்குச் சோர்வு ஏற்பட்டவுடன், செய்து கொண்டிருக்கும் அலுவலை நிறுத்திவிட வேண்டும். மேலும் அலட்டிக் கொண்டால் நரம்புத் தொகுதி பாதிக்கப்படும்; ஒவ்வொரு மாணவனும் தான் எவ்வளவு வேலை செய்யக் கூடும் என்பதைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால் மேற்கூறிய அபாயக் குறிகள் காணப்படுமானால்: உடனே வேலையை நிறுத்தி, ஓய்வு எடுத்துக் கொள்வது நலம். உணர்ச்சி உண்டாக்கும் சூழ்நிலையைத் தவிர்ப்பது உசிதம். போஷணை மிகுந்த உணவை அருந்த வேண்டும். திறந்த வெளியில் தேக அப்பியாசம் செய்யவேண்டும். குறைந்த பட்சம் எட்டுமணி நேரமாவது ஒரு நாளில் தூங்குவது அவசியம். வாரத்துக்கு ஒரு நாள் பூரண ஓய்வு எடுத்துக்கொள்ளுதல் மிகவும் நல்லது.

நல்வழி

# பள்ளிப் பிள்ளைகளின் நரம்புச் சோர்வு

எம். பி. நோயல்

பதின்மூன்று வயதுப் பையனை அவன் தாய் வைத்தியரிடம் காண்பித்தாள். "இவனுக்கு என்ன செய்கிறது?" என்று கேட்டாள். "சின்ன வயதில் இவன் அமைதியான பையனாய் இருந்தான். ஆனால் இப்பொழுதோ வர வர எதற்கெடுத்தாலும் சள் புள் என்று விழுகிறான். எனவே இவனுக்கு ஏதோ வியாதி இருக்கிறது என்று நினைத்து. இவனை இங்கே கொண்டு வந்தேன்' என்றாள் தாய். நன்றாய்ச் சோதித்துவிட்டு, டாக்டர், "அம்மா, இவனைக் கொஞ்சநாட்களுக்குப் பள்ளியை விட்டுநிறுத்துங்கள்; இவன் மூளை வரம்பு கடந்து அதிகமாய் வேலை செய்து இருக்கிறதாக அறிகுறிகள் காணப்படுகின்றன; இவனுக்கு ஓய்வு தேவை" என்று ஆலோசனை கூறினார்.

ஆம், வாஸ்தவம் தான். அவன் மாத்திரமல்ல, இன்னும் எத்தனையோ பள்ளிப்பிள்ளைகள் அவனைப் போல் அளவுக்கு மிஞ்சி அதிக வேலை செய்திருக்கிறார்கள். வைத்தியரின் கண் பார்வையில் இருக்க வேண்டியவர்கள், பள்ளியில் பாடங்களுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அடிக்கடி சோர்வு உண்டாகும். இதுவே அவர்கள் இளம் நரம்பு மண்டலத்திற்குக் கெடுதி ஏற்பட்டிருப்பதைக் காட்டும் அடையாளம்.

பள்ளியில் கற்கும்படி வரும் பிள்ளைகள் யாவரும் ஒரே மாதிரியானவர்கள் என்று நினைப்பது தவறு. அநேகர் நீண்ட காலக் கல்விப் பயிற்சிக்குத் தகுதியுள்ளவர் அல்ல. சூழ்நிலையும், பயிற்சியுமே அவர்களுக்குப் பிரதிகூலமாகிவிடுகின்றன. அநேகருடைய வாழ்க்கை பாழாய்ப் போவதைத் தடுக்க விரும்பினால், அவர்களுடைய குழந்தைப் பருவத்தில் நாம் போதிய சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள், படிப்பு விஷயத்தில் அவர்களை அதிகமாய்த் துரிதப்படுத்தக் கூடாது.

முப்பது பிள்ளைகள் கொண்ட ஒரு வகுப்பில் பத்துப்பிள்ளைகள் உபாத்தியாயர் கற்றுக் கொடுக்கும் பாடங்களை இலகுவில் அறிந்து கொள்ளலாம். மற்ற இருபது பிள்ளைகளும் அதே வேகத்திலேயே பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று உபாத்தியாயர் எதிர் பார்த்து அவர்களைத் துரிதப்படுத்துவாரானால், அதுவே அவர்களுடைய நரம்புகளுக்குத் தீமையை உண்டாக்கும்.

அநேக பைத்தியக்காரர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். பள்ளிப்

பிள்ளைகளாய் இவர்கள் இருந்த போது கவலையெடுத்துதகுந்தசிகிச்சைகள் இவர்களுக்குக் கொடுத்திருந்தால், ஒரு வேளை மதியிழந்திருக்க மாட்டார்கள். பள்ளிப் பிள்ளைகளில் நூற்றுக்கு ஐந்து பேர், பிற் காலத்தில் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்படும் சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

எவ்வளவு விரைவில் சிறுவர்களுடைய மூளைகளைத்துப் போய் விடுகின்றதுஎன்பதை நாம் சாதாரணமாக உணருவதில்லை. குழந்தைப் பருவத்திலிருந்து இளம் பருவத்திற்கும், பின் யௌவனப் பருவத்திற்கும் அவர்கள் வளரும் போது நரம்புத்தொகுதியும்மாறுதலடைந்துவளர்ச்சி யடைகின்றது என்பது தெளிவு. ஆனால் குழந்தையின் உடலில் சேமித்துள்ள நரம்பு வலுவு கொஞ்சமாய் இருப்பதால்,அவர்கள் இலகுவில்களைத்துப்போய் விடுகிறார்கள். குழந்தைகளை அவர்களுடையசக்திக்கு அதிகமாக வேலை செய்யும் படி வைக்கலாம். ஆனால் அதன்பலன் என்ன என்றுதெரியுமா?வளர்ச்சி குன்றிவிடும். நரம்புபலம்குறையும்.

மூளைக்கு அதிக வேலைகொடுத்தால், சரீரத்தின் மற்ற உறுப்புகளும் தாக்கப்படுகின்றன என்பதை அநேகர் நினைத்துப் பார்ப்பதில்லை. மூளை களைப்பால்சோர்வுற்றிருக்கும்போது. இருதயமும் பிருக்கங்களும் தங்களுடைய வேலையைச் சரியாய்ச் செய்ய முடியாது.

எனவே குழந்தை களைப்படைந்தவுடன், அதை மேலும் வேலை செய்யும்படி செய்வது மிகவும் மடமைத்தனம். சிக்கார்ச்சி என்ற ரஷ்யவிஞ்ஞானி களைப்பிற்கும், வேலை நுட்பத்தில் செய்யும் தவறுதல்களுக்குமுள்ள சம்பந்தத்தைக் கண்டுபிடிக்கச் சில ஆராய்ச்சிகளைநடத்தியிருக்கிறார், பள்ளிக் கூடம் துவங்குவதற்கு முன்பு குழந்தைகளுக்கு சில அப்பியாசங்களைக் கொடுத்தார். பின்பு பள்ளிக்கூடம் முடிந்த நேரத்திலும்—அதாவது குழந்தைகள் சோர்வுற்றிருக்கும் போதும்—அப்பியாசங்களைக் கொடுத்தார். இரண்டும் தரத்தில் ஒன்றாய் இருந்தாலும், பின்னைய சோதனையில் குழந்தைகள் அநேக தவறுதல்களுக்குள்ளானார்கள். குறிப்பாய்ச் சொல்ல வேண்டுமானால்முப்பத்து மூன்று சதவீதம் தப்புகள் அதிகமாயிருந்தன.

குழந்தை செய்யும் வேலையின் தொகுதி, காலஅளவைப்பொறுத்தது அல்ல; எவ்வளவு கஷ்டத்துடன் அது சாதிக்கப்பட்டது என்பதையும் பொறுத்ததல்ல; ஆனால் தனது மூளையின் உச்ச ஸ்தானதிறனை அது பயன் படுத்துவதையும், உண்டாகும் சோர்வு எவ்வளவாய் மூளையைப் பாதிக்கிறது என்பதையும் பொறுத்தது. கல்வி அறிஞர்களுக்குத் தெரியும், குழந்தையின் தேர்ச்சி அது கல்வி கற்றுக்கொள்ளும் மணி நேரங்களைப் பொறுத்தது அல்ல என்று. எனவே நரம்பு

சக்தி விரயமாகாத வகையில், எவ்வாறு கற்றுக்கொள்வது என்பதையே உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பழைய காலத்தில், படம் பிடிக்கும் காமிராவின் வெளிச்சம் நுழையும் துவாரத்தை அதிக நேரம் திறந்து வைத்தால் படம் தெளிவாய் விழும் என்று நினைத்தார்கள். பிள்ளையின் மனதை ஒரு காமிராவுக்கு ஒப்பிட்டு பள்ளியில் செலவிடும் நேரத்தை அதிகரித்தார்கள். ஆனால் படத்தின் நுட்பம், பின்னால் இருக்கும் பிளேட்டில் பிம்பம் விழும் துலாம்பரத்தைப் பொறுத்தது என்பது நமக்குத் தெரியும்.

அநேக மணி நேரங்கள் உட்கார்ந்து ஓயாமல் மூளைக்கு வேலை கொடுத்தால் களைப்பு உண்டாகும். நிமிர்ந்து உட்காருவதற்குத் தசைநார்களின் முறுக்கு ஓரளவு அனுகூலமாயிருக்கின்றது. சோர்வுற்றிருக்கும்போது அவை தளர்ந்து கொடுக்க வேண்டியதாகிறது. ஆகையால், முதுகெலும்பின் கோணங்கள் அதிகமாகி, நேராய் நிமிர்ந்து உட்காரவோ, நடக்கவோ உற்சாகமில்லாமற் போகிறது.

குழந்தையின் மூளைக்கு தொடர்ச்சியாய், வெகுநேரம் வேலை கொடுக்கக் கூடாது. வேலை—ஓய்வு, வேலை—ஓய்வு என்று மாறி மாறி இருக்க வேண்டும். குழந்தை அங்குமிங்கும் சற்று அசைவதற்கு வசதி அளிப்பது அவசியமே. வீட்டுவேலை அதிகமாகக் கொடுக்கக்கூடாது. பள்ளிக்கு வெளியில், குழந்தையின் தசைநார்களுக்குப் போதுமான வேலை கொடுக்க வேண்டும். சோர்வுக்கு விளையாட்டு ஒருசிறந்த பரிகாரம் என்பதை மறந்து போகக்கூடாது.

இரத்த சோகை என்ற வியாதிக்குக் குழந்தைகள் இலகுவாய்ப் பலியாகி விடுகிறார்கள். வியாதியை எதிர்க்கும்சக்தி இவர்களுக்கு மிகவும் கொஞ்சம். தசையின் அசைவால் நிணநீர் உற்பத்தி அதிகரிக்கிறது. இரத்த ஓட்டம் துரிதப்படுகிறது. எனவே குழந்தையின் போஷிப்பு அதிகரித்துநோயை எதிர்க்கும் தன்மை விருத்தியடைகிறது.

பராக்குப் பார்ப்பதும்; கருத்துடன்காரியத்தை ஊன்றிக்கவனியாமலிருப்பதும், மூளைச் சோர்வில்காணப்படும் முதல் அடையாளங்கள். ஒரே காரியத்தில் அதிக நேரமாய் ஈடுபட்டிருந்தால், நரம்பு சக்தி செலவழிந்து கொண்டே போகிறது. இது தடையின்றி நடக்குமானால், உடலுக்குப் பெரும் ஆபத்து உண்டாகும். இதைத் தடுக்கும் முறையில் பராக்குப் பார்த்தல் ஒரு சாதனமாக அமைகிறது. எனவே, குழந்தைக்கு ஓய்வுதேவை என்று இது நம்மை எச்சரிக்கிறது. இரத்தத்தில் வந்து குவிந்திருக்கும் அசுத்தங்கள் நீக்கப்பட வேண்டும் அல்லவா? ஆகையால் இயற்கை அன்னை மூளையின் கதவை இழுத்துச்சாத்தி, "குழந்தாய், நீ வெளியே போய், விளையாடு" என்று கட்டளையிடுகிறாள்!

மூளையின் சோர்வைக் காட்ட இன்னும் எத்தனையோ அடையாளங்கள் இருக்கின்றன. அவற்றைப் பிள்ளைகளும் உணர்வதில்லை உபாத்திமார்களும் கவனிப்பதில்லை. அவற்றில் சில பின்வருபவை: கண்களை அர்த்தமில்லாமல் உருட்டிக்கொண்டிருப்பது: உதடுகளை மடித்து அமுக்குதல், ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யுமுன் நாக்கை வெளியே நீட்டுதல், ஒருவார்த்தைக்குப்பதிலாக இன்னொரு வார்த்தையைச் சொல்லுதல், மறதி. உதாரணமாக, அடுத்த அறையிலுள்ள ஒரு பொருளை நீங்கள் எடுத்து வரச் சொன்னால், குழந்தை இன்னொரு பொருளை எடுத்து வரும்: அல்லது பாதித் தூரம் சென்றதும், மறுபடியும் திரும்பிவந்து, 'எதை எடுத்துவரச் சொன்னீர்கள் என்று கேட்கும்.

மேற் சொன்னவை சாதாரண அறிகுறிகள் தான். இவற்றைவிட அழுத்தமான அறிகுறிகளும் காணப்படலாம்: தன்னையறியாமலே கை, முகம், கண் முதலியவைகளின் தசைநார்களைச் சுளித்துக் கொள்ளுதல், வெகுளி, உடலின் இரு பாகங்களும் ஒன்றுக்கொன்று இசைவின்றி அசைதல், கைகளை நீட்டினால் ஒரே மட்டத்தில் இல்லாமலிருத்தல், கடுக்கமான கை எழுத்து. இவைகளும் அறிவுக் குறைச்சலே அல்ல, நரம்புச் சோர்வையே காட்டும் அறிகுறிகளாகும். தூக்கமின்மை, தலைவலி, ஞாபக மறதி, இவையாவும் மூளைக்கு ஓய்வுவேண்டுமென்பதை உணர்த்துகின்றன.

குழந்தைப் பருவத்தைக் கடந்து, வாலிபப்பருவத்தை அடைந்துகொண்டிருக்கும் மாணவமாணவிகளுக்கு மூளைச் சோர்வால் அதிக ஆபத்து நேரிடக்கூடும். ஏனென்றால் அக்காலத்தில்அவர்களுடைய உணர்ச்சி நிலை ஸ்திரமற்றதாயிருக்கிறது. பெண்களில் தான் இது மிகவும் நன்றாகத் தெரியும். பதின்மூன்று பதினன்கு மட்டும் சுகதேகியாயிருக்கும் குழந்தை திடீரென்று இரத்தமின்மையால் வெளிறிப் போகும். ஒரு விதமான அவசரத் துடிதுடிப்பு எல்லாக் கிரியைகளிலும் காணப்படும். கொஞ்சம் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் பெண்களுக்கு மூச்சுவாங்கும். உட்காரும் போதும், நிற்கும்போதும் நேராய் உடலைவைத்திருக்க முடியாது. அடிக்கடி அஜீரணம், தலைவலி, களைப்பு உணர்ச்சிமுதலியவை தோன்றும். இச்சமயத்தில் தான் படிப்புக்காக அதிக சக்தி தேவையாயிருக்கிறது. இது மாத்திரமா? நரம்பு வலிமையின் ஓர் பாகத்தை பரீட்சையின் கவலை கௌவிக் கொள்கிறது. பற்றாக் குறைக்கு, அதே சமயத்தில் பெண் வளர்ச்சியடைய வேண்டியும் இருக்கிறது. எத்தனை தர்ம சங்கடங்கள், பாருங்கள்!

எனவே இளைஞர்களுக்கு நாம் கொடுக்கும் புத்திமதிகள் எவையெனில்:

(59—ம் பக்கம் பார்க்க)

## ஆரம்பப் பாடசாலைகளுக்கு

## 'or Higher Ele Sohools)

## இண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan - V. Subramaniam)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 26 | 13–5–'53 |
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | ... | ... * |

மாதிரிப் பிரதிகளுக்கு 0–10–0 அனுப்பவும்.

## புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B.A; L.T., & V. S. Leela B.A; B.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 2 | 0 | 2 | 13–1–'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 13–1–'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 2 | 13–1–'54 |

மாதிரிப் பிரதிகளுக்கு 1–4–0 அனுப்பவும்.

## சமூக நூல்

(T. S. Umapathy, M.A. L.T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 1 | 0 | ... | ... * |
| ஏழாம் வகுப்பு | 1 | 8 | 0 | ... | ... * |
| எட்டாம் வகுப்பு | 1 | 8 | 0 | ... | ... * |

மாதிரிப் பிரதிகளுக்கு 1–8–0 அனுப்பவும்.

* அங்கீகாரமான தேதியும் கெஜட்டின் பக்கமும் பிறகு அறிவிக்கப்படும்.

## அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'53 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'53 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'53 |

மாதிரிப் பிரதிகளுக்கு 0–12–0 அனுப்பவும்.

Edited, Printed and Published. by P. Veeraraghavan at the
'Venkatesan Press' 94/95, New St. Mannady Madras—1.